Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


# தினமுரசு

தினப்பதிப்பு


THINAMURASU

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1316) MCS
SMS your name & course to 772 395 895 & Get Schol.
Supported By UNDP/JRRP
324,Palaly Road,Parameswara Junction

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 24 புதன்கிழமை (07.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 158


எழுதும் கலை (11)


வேறொருவரின் விருப்புக்கு கூட்டமைப்பு... (08)


சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி... (14)


மாறும் முகங்கள் (13)

## படகுசேவை பகிஷ்கரிப்பு பயணி மீதான தாக்குதலின் எதிரொலி

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பயணி ஒருவரை நயினாதீவு பௌத்த துறவி ஒருவர் குறிகாட்டுவான் - துறையில் வைத்து தாக்கியதை அடுத்து இன்று குறிகாட்டுவான் நெடுந்தீவுப் படகுச் சேவையைப் பகிஷ்கரிக்க படகு ஓட்டும் தொழிலாளர்கள் முடிவெடுத்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, நெடுந்தீவு வாசி ஒருவர் ஊருக்குச் செல்வதற்காக குறிகாட்டுவான் இறங்குதுறையில் நேற்று மாலை 4.00 மணியளவில் காத்துக்கொண்டு நின்றவேளை குறித்த பௌத்த துறவி "இது உங்களுக்கு உரிய இறங்குதுறை இல்லை" எனக் கூறித் தாக்கியதாகவும், குறித்த சம்பவத்தைக் கண்டித்தே இந்தப் பகிஷ்கரிப்பு நடைபெறவுள்ளது.

## கிளிநொச்சியில் வாழ்வெழுச்சித் திட்டம் அமைச்சர் டக்ளஸ் தலைமையில் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வாழ்வெழுச்சித் திட்டத்தினூடாக கிளிநொச்சி மாவட்டத்தின் பாரம்பரிய, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை



எதிர் காலத்தில் நவீனமயப்படுத்துவதுடன் அவற்றை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கையெடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கினார். வாழ்வெழுச்சித் திட்டம் தொடர்பாக (15ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்
### உடுப்பிட்டியில் சோகம்

(வடமராட்சி)

உடுப்பிட்டி சுவாதிப் பிள்ளையார் கோவில் வேட்டைத் திருவிழாவில் மின்சார இணைப்பு வழங்கிக் கொண்டிருந்தவர் திடீரென மின்சாரம் தாக்கியதால் அந்த இடத்திலேயே மரணமானார். நேற்று இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் இமையாணன் பகுதியைச் சேர்ந்த கண்ணன் என்று அழைக்கப்படும் பவானந்தன் பிரபா (வயது-25) என்பவரே மரணமானவராவார். (18)

# ═இலங்கையில் ஆட்சி மாற்றம்═ இதுவே மேற்குலகின் உள்நோக்கம்



## தமரா குணநாயகம் குற்றச்சாட்டு

(ஜெனிவா)

அரசு மீது அழுத்தம் பிரயோகிக்க முயற்சிக்கும் மேற்கு நாடுகள் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை உள்நோக்கமாக வைத்துச் செயற்படுகின்றன என்று ஐ.நா.வுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கலந்து கொண்டிருக்கும் தமரா குணநாயகம் அங்கு பன்னாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

அவர்களின் உண்மையான இலக்கு ஆட்சி மாற்றம்தான். இலங்கையில் தாம் அடைய விரும்புவனவற்றில் இதுவும் ஒன்றாகும் என ஜெனிவாவிலுள்ள பல தூதுவர்கள் என்னிடம் கூறியுள்ளனர். எனவே இதை நாம் மிகத் தீவிரமாக கருத்திற்கொள்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 10 வருடங்களில் தனது சொந்தப் பிரஜைகளை (15ஆம் பக்கம் பார்க்க)

## உருளைக்கிழங்கிற்கு அதிகரிக்கிறது வரி

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கிற்கான இறக்குமதி வரியை கிலோவுக்கு 10 ரூபாவினால் அரசாங்கம் அதிகரித்துள்ளது. உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக இவ்வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த (15ஆம் பக்கம் பார்க்க)

## சமூக அபிவிருத்திக்கு ஜப்பானிய அரசு உதவி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பின் தங்கிய பிரதேசங்களின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் ஜப்பானிய அரசாங்கம் சுமார் 1.55 பில்லியன் ரூபாவை நன்கொடையாக (15ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களுக்கு மானியம் விசேட நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் மானிய முத்திரை விநியோகம் நடமாடும் சேவை ஒன்றின் மூலமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவ் எரிபொருள் மானிய முத்திரைகள் கடந்த முதலாம் திகதி முதல் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தில் வைத்து கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இருந்தும் நீண்ட தூரங்களில் இருந்து கடற்றொழிலாளர்கள் இம் முத்திரைகளை வந்து பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதன் காரணமாக முத்திரைகளை கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அலுவலர்கள் நேரடியாக நடமாடும் சேவை மூலம் கடற்றொழிலாளர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இவ் எரிபொருள் நிவாரண முத்திரைகளுக்கான எரிபொருளை விநியோகிப்பதற்காக ஏற்கனவே மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஒரு தனியார் எரிபொருள் விற்பனை நிலைத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டுள் ளதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் அறிவித்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## ரஷ்ய பிரஜையின் உடமைகள் யாழ்.நகர் விடுதியில் திருட்டு
### சந்தேக நபருக்குப் பிணை

(திருநெல்வேலி)

யாழ்.நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ரஷ்ய நாட்டுப் பிரஜை ஒருவரின் மடிக்கணினி உதிரிப் பாகங்களைத் திருடினார் எனக் குற்றம் சாட்டப்பட்டு யாழ்.பொலிஸாரினால் ஒருவர் யாழ்.நீதிமன் றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு இரண்டு வாரங்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

30 ஆயிரம் ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்களை (15ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல் செய்ய பொருத்தமான பொறிமுறை அரசிடம் இல்லை
### ஜெனிவாவில் அமெரிக்கப் பிரதிநிதி கவலை

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் வரவேற்கக்கூடியதாக இருந்த போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சரியான பொறிமுறைகள் எதுவும் முன்வைக்கப்படாதது கவலை அளிப்பதாக மனித உரிமைகள் தொடர்பான ஜெனிவா கூட்டத் தொடரின் இரண்டாவது அமர்வின் போது உரை நிகழ்த்திய அமெரிக்கப் பிரதிநிதியான ஜோன் சீ.மரிஸ் தெரிவித்தார்.

தனது பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு எந்தவொரு திட்டத்தையும் முன்வைக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள அமெரிக்கா, இப்போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர் மீறல்கள் குறித்து போதிய விசாரணைகளை மேற்கொள்ளவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளது.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத் தொடரின் நேற்று ஆரம்பமாகிய 15 ஆவது அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அமெரிக்காவின் பிரதிநிதியான ஜோன். சீ. மரிஸ் (15ஆம் பக்கம் பார்க்க)

# பொறுப்புக்களை தட்டிக்கழிக்கிறது வலி. தென்மேற்கு பிரதேச சபை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி அதிகாரங்களைக் கைப்பற்றி அதன் மூலம் தத்தமது பிரதேசங்களை வளப்படுத்தாது, அப்பிரதேச மக்களின் சுத்தமான, சுகாதாரமான வாழ்வை உறுதிப்படுத்தாத பிரதேச சபைகள் இன்றும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த வகையில் வலி. தென்மேற்குப் பிரதேச சபையில் அவர்களது ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தைச் சுத்தமாக வைத்திருப்பதில்லை எனத் தெரியவருகின்றது.

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் நகரில் பிரதான வீதி உட்பட சகல வீதிகளும் குப்பை கூழமாகக் காட்சியளிப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள பொது மக்கள் சம்மந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

மானிப்பாய் நகர் மற்றும் நகரை அண்டிய பகுதிகள், பண்டத்தரிப்பு நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வலி. தென மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் நகர் சகல துறைகளிலும் முன்னணி வகிக்கிறது.

பிரபலமான கல்லூரிகள், வங்கிகள், வைத்தியசாலை, பொதுச் சந்தை, பிரதேச சபையின் அலுவலகம், எரிபொருள் நிலையம் ஆலயங்கள் உட்பட நூற்றுக் கணக்கான வர்த்தக நிலையங்கள் இந்தப் பிரதேசத்தில் உள்ளன. மக்களும் இந்தப் பகுதிகளில் நெருக்கமாக வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த இரு மாதங்களாக இப்பகுதியில் மக்கள் நடமாட்டமும் வாகனப் போக்குவரத்தும் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகிறது. இதேவேளை இப்பிரதேச வீதியோரங்களில் சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் குப்பை கூழங்கள், அசுத்தமான கழிவுகள் என்பன காட்சியளிக்கின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முனனர் பிரதேச சபையில் கடமையாற்றும் தொழிலாளர்களால் வீதிகள் கூட்டித் துப்புரவு செய்யப்பட்டு வந்தன. ஆனால் தற்பொழுது துப்புரவு செய்யும் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இது குறித்து பிரதேச சபை உறுப்பினர் ஒருவரிடம் வினவியபோது தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. பொதுமக்களின் நலன்கருதியும் ஏனைய தொற்று நோய்த் தாங்கங்களிலிருந்து பாதுகாப்பதற்காகவும் மானிப்பாய் பிரதேச சபை இவ்விடயத்தில் கவனமெடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். இனிமேலாவது மானிப்பாய் பிரதேச சபை அக்கறையெடுக்குமா?



யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற "எத்தனங்கள்" சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் எஸ்.விசாகரூபன் நூலை வெளியிட்டு வைத்து சிறப்புப் பிரதி வழங்குவதையும் அருகில் நூலாசிரியை சிற்பனை கீதா கணேஷ் நிற்பதையும் காணலாம். (137)

# சட்டவிரோத மது விற்பனை செம்பியன் பற்றில் இருவர் சிக்கினர்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்றுப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக சாராயம் விற்ற இருவருக்குப் பருத்தித்துறை நீதிமன்றில் 25 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளை செம்பியன்பற்றுப் பகுதியில் உள்ள சில வீடுகளில் சோதனை நடவடிக்கைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டபோது இருவர் அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்றது கண்டுபிடிக்கப்பட்டது.

இவ் இருவரையும் கைது செய்த பொலிஸார் பருத்தித்துறை நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆயர் செய்தபோது இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 25 ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறு பணிக்கப்பட்டது. (116)

## மாசிமக திருவிழா

நீர்வேலி வடக்கு குறுக்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆலயத்தில் இன்று மாசிமகத் திருநாள் நிகழ்வுகளாக காலை 9.00 மணிமுதல அன்னைக்கு விசேட திரவியாபிஷேகமும் சங்காபிஷகமும் நடைபெறவுள்ளது. தொடர்ந்து தீபாராதனையும் அன்னதானமும் இடம்பெறும். மாலையில் விசேட அலங்கார பூஜை நடைபெற்று தீப பூஜையும் இடம் பெறவுள்ளது.

# போக்குவரத்திற்கு இடையூறு சூத்திரதாரிக்கு தண்டம்

யாழ். நகரப்பகுதி மற்றும் அண்மித்த பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறாகக் கட்டடப்பொருட்கள் மற்றும் கழிவுப் பொருட்கள் போட்ட ஐந்து நபர்களுக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது. யாழ் பொலிஸாரினால் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது குறித்த 5 நபர்களும் கைதுசெய்யப் பட்டு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு இணங்க ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (எஸ்)


## கணினி திருத்தம்

(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1305)

## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித் தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1285)


# எச்.டி.எவ்.சி. வங்கிக் கிளை நேற்று யாழ். நகரில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

அரச வீடமைப்பு வங்கியான ஏச்.டீ. எப்.சி. வங்கியின் 32 ஆவது கிளை நேற்று முற்பகல் யாழ். கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும் முதலாவது வீடமைப்பு வங்கியாகவும் திகழும் இவ்வங்கி இலங்கை மத்திய வங்கியின் கீழ் தொழிற்படும் ஒரு அரச வங்கியாகும்.

நேற்று முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற வங்கித்திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஏச்.டி.எப்.சி. வங்கியின் தலைவர் திருமதி கிமாலி குணதிலக வங்கிக் கிளையை வைபவ ரீதியாகத் திறந்துவைத்தார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளில் இவ்வங்கியில் முதல் கணக்கை யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசா ஆரம்பித்துவைக்க அதனை ஏச்.டீ.எப.சி வங்கியின் தலைவர் திருமதி கிமாலி குணதிலக பெற்றுக்கொண்டார். அடுத்து வங்கியின் "தளிர்கள்" சேமிப்புக் கணக்கை ஆரம்பித்த மாணவர்களுக்கான பரிசில்களும் வங்கியின் தலைவரால் வழங்கப்பட்டது.

மேலும் இவ்வங்கியானது யாழ். மாவட்டத்தில் முதலில் பொற்கடன் திட்டம் ஒன்றினையும் நேற்று அறிமுகப்படுத்தியிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் ஏச்.டீ.எப்.சி. வங்கியின் அதிகாரிகள், யாழ். கிளை அதிகாரிகள், ஊழியர்கள் வாடிகையாளர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.(பா)

## ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வு நடைபெறுகின்றது. அதன் பிரகாரம் எதிர்வரும் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆலய சுற்றுப்பிரகாரமூர்த்தி பூசை நிறைவுற்றதும் முற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் சஹானா இசைக்குழுவினர் வழங்கும் பக்திப்பாடல்கள் இடம்பெறும் அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் நடைபெறும் என ஆச்சிரம மடாதிபதி எம்.மோகனதாஸ் சுவாமி தெரிவித்துள்ளார். (116)

# கரைச்சிக் குடியிருப்பில் புதிய பேருந்து நிலையம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைத்துரைப்பற்று பிரதேச சபையினால் கரைச்சி குடியிருப்புப் பகுதியில் புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

இப்பேருந்து நிலையம் பி.எஸ்.பி.ஜி. திட்டத்தின் கீழ் 5 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக் கப்பட்டு முதல் கட்ட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும் கரைச்சிப் பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைத்துரைப்பற்று பிரதேச சபையின் 2012ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நெல்சிப் திட்டத்தினால் 51.84 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (141)




## ஓட்டோ உரிமையாளர் சாரதிகளுக்கும், பயணிகள், பொதுமக்களுக்குமான வேண்டுகோள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல பகுதிகளிலும் வாடகைச் சேவையில் ஈடுபடும் சகல ஓட்டோ சாரதிகளுக்கும் எமது சங்கம் மூலம் அங்கத்துவ அடையாள அட்டை வழங்கப்படுகின்றது. ஓட்டோ சாரதிகளின் சேவை நலன் கருதியும், பயணிகள், பொதுமக்களின் நலன் கருதியும், ஓட்டோ சாரதிகளின் மீது பயணிகளுக்கும், பொதுமக்களுக்கும் நம்பகத்தன்மையை ஏற்படுத்திச் சிறந்த சேவையை சாரதிகள் மேற்கொள்ள எம்மால் வழங்கப்படும் அங்கத்துவ அடையாள அட்டையை சகல பகுதி ஓட்டோ சாரதிகளும் பெற்று, அதனை அணிந்து சேவையில் ஈடுபடுமாறு மீண்டும் அறிவுறுத்தலோடு அறியத்தருகின்றோம்.

*பயணிகளுக்கு!*

தங்கள் பயணத்தைச் சுகமாக மேற்கொள்ளத் தாங்கள் வாடகைக்கு அமர்த்தும் ஓட்டோக்கள், சாரதிகள் எமது சங்கத்தில் அங்கத்துவம் பெற்றவர்களா என இனம்கண்டு வாடகைக்கு அமர்த்தி தங்கள் பயணத்தைச் சுகமாக மேற்கொள்ளவும். அவசரமேலீட்டால், தங்கள் பயணத்தை மேற்கொள்ள கண்ட இடங்களில் நின்று அங்கத்துவம் பெறாத ஓட்டோக்களில் பயணம் செய்வதன் மூலம் தங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாம் பொறுப்பாக இருக்க முடியாதுள்ளது. எனவே ஓட்டோ தரிப்பிடங்களில் சங்க அங்கத்துவ முள்ளவர்களை இனம்கண்டு பயணிக்குமாறு அறியத் தருகின்றோம்.

***யாழ். மாவட்ட முச்சக்கரவண்டி மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்.***

(C/1316)

நலம்பிறவாத இடமோ, பேசாத மொழியோ, தோன்றாத குலமோ, கிடைபாது. எனவே எல்லா நாடும் நமது நாடே எல்லா மக்களும் நமது சகோதரர் என்று கருதி சாந்தமாகவும், அன்பாகவும் வாழ வேண்டும்.

- வாரியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## நம் மனதில் சமநீதி உண்டா?

நாளை மார்ச் 8 ஆம் திகதி. உலக மகளிர் தினம். இது இப்போதும் ஆண்களின் உலகமாகத்தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. பெண்ணைத் தாயாக, தேவதையாக, சக்தியாக, தெய்வமாகப் போற்றுவதாகச் சொல்வதை விட்டுவிட்டு, சகமனுசியாக ஏற்றுக் கொண்டிருக்கிறோமா என்பதை ஆண்கள் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாகக் கேட்டுப் பார்த்துக் கொண்டால் உண்மை விளங்கும்.

எந்தப் பூச்சுற்றும் வார்த்தைகளாலும் பெண்ணைச் சமுதாயத்தின் இரண்டாம் நிலையிலேயே வைத்திருக்கும் உண்மையை ஒளித்துவிட முடியாது. இந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகிறோம் என்று போராடிய தமிழ்ச் சமூகத்தின் உள்ளேயே, சாதிரீதியாகவும் பால்ரீதியாகவும் இரண்டாம் மூன்றாம் தரமாகப் பலர் நடத்தப்பட்டு வருவது பற்றி நமக்கு எந்தக் கூச்சமும் உண்டாவதில்லை.

பல இழிவுகளை நாம் மூடி மறைத்து இவ்வாறு நிகழவில்லை என்று ஒரு போலி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது சமூகத்தில் பெண்களின் நிலைமை இதுவே. சமுதாயத்தில் இந்த அநீதி நடப்பதை உணர்ந்தும், அலட்சியப்படுத்தியபடியோ அல்லது பெரும்பாலும் நியாயப்படுத்தியபடியோ, அதை ஏற்றுக்கொள்ளாது செல்லும் மனப்போக்கே நமது பொது மனப்போக்காக உள்ளது.

பெண்ணை தனக்குச் சமமானவள் இல்லை என தீர்மானமாக ஆண் கருதியதால், அவனால் எப்படி நியாயப்படுத்தப்பட்டிருப்பினும், அவை ஆண்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு ஆண்களால் ஒப்பிக்கப்பட்டவை என்பதே உண்மை. பெண்ணின் இந்த நிலைமை குறித்து, பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான பூலென் தெ லா பார் (Poulain de la Barre) என்ற பிரெஞ்சுப் பெண்மணி சொன்னார்: “பெண்களைக் குறித்து ஆண்கள் வழங்கிய தீர்ப்புகள் அனைத்துமே நம்பகத்தன்மை அற்றவை. ஏனெனில் அங்கே நீதிபதி வழக்கறிஞர்கள், வாதி, பிரதிவாதிகள், சாட்சிகள் அனைவருமே ஆண்கள்.”

மேலும், “இங்கே சட்டங்களை இயற்றியவர்களும், வடிவமைத்தவர்களும் சரி பின்னர் அவற்றை கோட்பாடுகளாக மாற்றி அமைத்த சட்ட நிபுணர்களும் சரி ஆண்கள். எனவே அவை அனைத்துமே ஆண்களுக்கு அனுகூலமாக இருக்கின்றன” என்றும் அவர் சொன்னார்.

உண்மையில், தொன்று தொட்டே பெண்களுக்காகச் சிந்திப்பதும், அவர்களுக்கான நியதிகளை வழங்குவதும் ஆண்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. “தெய்வச்செயல், அவன் என்னைப் பெண்ணாய்ப் படைக்கவில்லை”. என காலைப் பிரார்த்தனையில் யூதர்கள் கடவுளைச் சிலாகிக்க அவர்களது மனைவியரோ மற்றொரு பக்கம், “ஆண்டவன் அருள் அவனது விருப்பத்திற்கிணங்க என்னைப் படைத்தான்” எனப் பணிவுடன் பெருமிதம் அடைவார்கள் என்று சிமோன் தெ பொவார் தனது “இரண்டாம் பாலினம்” நூலில் குறிப்பிடுகிறார்.

“தன்னை அடிமையாக அல்லாமல் சுதந்திர மனிதனாக பிறக்க வைத்ததற்காக முதலாவதாகவும், தன்னைப் பெண்ணாக அல்லாமல் ஓர் ஆணாக பிறக்க வைத்தமைக்காக இரண்டாவதாகவும்”, இறைவனிடம் தனது நன்றியைத் தெரிவித்தவர் பிளேட்டோ என்ற ஆதிகால அறிஞர் என்பதறிவோம்.

ஆக, மானுடம் என்பது ஆணுக்கானது. ஆணை விலக்கிவிட்டு பெண்ணில்லையென்பதும், அவள் பிறர்சார்ந்தே இயங்கப் பிறந்தவளென்றும் சொல்லி வந்திருக்கிறார்கள். இதுவே நம் சிந்தையில் ஊறி, மனிதர்கள் சமமாகப் படைக்கப்படவில்லை என்பதையே ஏதோ ஒருவகையில் நாமெல்லோரும் நியாயப்படுத்திக் கொண்டிருப்பதாக இருக்கிறது.

இன்றைக்கு மெல்ல மெல்ல பௌதீக ரீதியாக பெண்நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறதென்பது உண்மையானாலும், சிந்தனை இன்னும் மாறிவிடவில்லை. வருங்கால உலகம் ஆண்களுக்கு மட்டுமல்ல. பெண்களுக்கும் உரியது என்கிற நிலை வருமா? அப்படி வராமல், நாம் மனதில் சமநீதி கொண்ட மனிதர்கள் எனச் சொல்லிக்கொள்ள முடியாது.

- ஆசிரியர்

# மன்னார் ஆயர் இராயப்புவை நீதிமன்றில் நிறுத்தவேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கோரிக்கை விடுத்திருப்பதானது, இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறிய செயல் என்பதால், அவரை உடனடியாக நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆயர் இராயப்பு ஜோசப் கடந்த 30 வருடங்களாக புலிகளின் பிரிவினைவாதத்திற்கு ஆதரவாகவே குரல் கொடுத்து வந்துள்ளார். அவர் நாட்டின் ஐக்கியத்தை ஏற்றுக்கொள்ளாத அரசியல் நிலைப்பாட்டிற்கு குரல் கொடுத்து வருபவர். இதனால் புலிகளுக்கு ஆதரவான இவ்வாறான கோரிக்கைகளை விடுப்பது குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்கக் கூடாது என ஆயர்கள் சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கும் போது, மன்னார் ஆயர் அதற்கு முரணாக கோரிக்கை விடுத்துள்ளார். இதனால் ஆயர்கள் சபையின் நிலைப்பாடு என்ன என்பதை பேராயர் மல்கம் ரஞ்சித் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

# தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த மிகவும் முக்கியமானது மொழி

## என்கிறார் அமைச்சர் விமல்

(கொழும்பு)

தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முன்னர், நடைமுறைப்படுத்தக் கூடிய விடயங்கள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிறுவனங்கள் மூன்று மொழிகளில் பணியாற்ற வேண்டும். குறைந்த பட்சம் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பணியாற்ற வேண்டும். எனினும் அண்மையில் ஒரு அரச நிறுவனம் நியமனக் கடிதங்களை வழங்கும் போது, வட பகுதியை சேர்ந்த இரண்டு பேருக்கு சிங்கள மொழியில் நியமனக் கடிதங்களை வழங்கியிருந்தது. இது தவறானது. அவர்களுக்கு தமிழில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அந்தத் தவறு ஏற்பட்ட போது, அதனை நிவர்த்திக்குமாறு பணித்தேன். தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்தும் விடயத்தில் மொழி மிகவும் முக்கியமானது.

தமது நியமனக் கடிதங்கள் தமது மொழியில் கிடைக்காவிட்டால் அது பிரச்சினைக்குரியது. சிலருக்கு அது பிரச்சினையாக இருக்காமல் போகலாம். எனினும் பாரிய பிரச்சினைகள் ஏற்பட இது காரணமாகிவிடும் என்பதை மறந்து விடக் கூடாது. நியமனக்கடிதங்களை தமிழில் வழங்க முடியாமல் இல்லை. சில அதிகாரிகளுக்கு அவ்வாறான தேவையில்லை. இவ்வாறான பிரச்சினைகளை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும். இதன் மூலம் தமிழ் மக்களையும் இந்த சமூகத்தில் ஒரு அங்கமாக மாற்ற முடியும். இதனால் தேசிய ஐக்கியம் குறித்து பேசும் போது இவ்வாறான விடயங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் அமைச்சர் வீரவன்ச கூறியுள்ளார்

## 35ஆயிரம் அரச ஊழியருக்கு தமிழ் மொழிப்பயிற்சி

இவ்வருடம் மேலும் 35 ஆயிரம் அரச ஊழியர்களுக்கு தமிழ் மொழிப்பயிற்சியை வழங்குவதற்கு தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

மாவட்ட செயலாளர் மட்டத்தில் சேவை நிலையங்களில் இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் மொழியறிவு மற்றும் பயிற்சி நிலையத்தின் தலைவர் சீதாவிதான ஆராய்ச்சி குறிப்பிட்டார். கடந்த வருடமும் 35ஆயிரம் அரச ஊழியர்களுக்கு தமிழ்மொழிப்பயிற்சி வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தமிழ்மொழிப் பயிற்சிகளை பெற்றுக்கொள்ளும் அரச ஊழியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனவும் தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சின் மொழியறிவு மற்றும் பயிற்சி நிலையத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஆணைக்குழு அறிக்கை குறித்து விவாதம் அரசாங்கம் முற்றாக நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என மனித உரிமை பேரவை விடுத்த கோரிக்கையை இலங்கை முற்றாக நிராகரித்துள்ளது. இவ்வாறான கோரிக்கையை விடுக்க ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு முடியாது என ஜெனிவாவுக்கான இலங்கையின் தூதுவர் தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் விவாதம் ஒன்று அவசியம் என ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை தெரிவித்துள்ளார். எனினும் இவ்வாறான கோரிக்கையை விடுக்க ஆணையாளருக்கு அதிகாரமில்லை என தமரா குணநாயகம் கூறியுள்ளார்.

முன்னர் இருந்த பேரவையின் இரண்டு பட்ட நிலைப்பாடுகளுக்கு தீர்வாகவே தற்போதை மனித உரிமை பேரவை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கையில் செயற்படுத்தப்பட உள்ள செயற்பாடு ஒன்றில் பரிந்துரைகளை குறித்து பேரவையில் விவாதம் ஒன்றை நடத்துவது தவறான முன்னுதாரணம் எனவும் குணநாயகம் கூறியுள்ளார்.

## மகளிர் தின நிகழ்வு

(குருநகர்)

யாழ்.சொண்ட் நிறுவன அனுசரணையுடன் மக்கள மன்றங்கள் ஒன்றினைந்து ஏற்பாடு செய்துள்ள சர்வதேச மகளிர் தின வைபவம் நாளை முற்பகல் 10.00 மணியில் இருந்து பிற்பகல் 3.30 மணிவரை ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் கோப்பாய் மக்கள் மன்ற பிரதிநிதி திருமதி.பவானி விக்கினேஸ்வரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரமத விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் திருமதி. மதுமதி வசந்தகுமார் கலந்துகொள்வார்.

கௌரவிப்பு, கலைநிகழ்வுகளுடன் மகளிர் தினத்தை முன்னிட்டு மாணவர் மற்றும் திறந்த மட்டங்களில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி ஈட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கல் பெண்களின் உரிமைகள், வாழ்கையைப் பாதிக்கும் காரணிகள் சம்பந்தமான கருத்துக்களும் இடம்பெறவுள்ளது. (68)

# பலம்மிக்க நாடுகளைப் பகைத்தால் சவால்களை வெற்றிகொள்ள இயலாது

## அமைச்சர் நவீன் திஸாநாயக்க

(கொழும்பு)

சர்வதேச நாடுகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தி, பலம்மிக்க நாடுகளை பகைத்துக் கொண்டு, நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களை வெற்றிக்கொள்ள முடியாது என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நுவரெலியாவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இன்று வீதியில் இறங்கி சர்வதேசத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். சர்வதேச சூழ்ச்சிகள் குறித்து பேசுகின்றனர். எனினும் தனித்து போராடி, சர்வதேசத்தில் உள்ள பலமிக்க நாடுகளை பகைத்து கொண்டு, முன்னோக்கிச் செல்ல முடியாது. இதனால் நாம் அனைவரும் உதவிகளை பெற்று வேலைத்திட்டத்திற்கு செல்ல வேண்டும்.

இலங்கை முன்னேற உலகில் பலமிக்க நாடுகள் உதவியுள்ளன. பிரித்தானியா விக்டோரியா நீர் தேக்கத்தை அமைக்க இலங்கைக்கு உதவியது. மதுருஓயாவை நிர்மாணிக்க கனடா உதவியது. ரந்தெனிகல நீர்தேக்கத்தை நிர்மாணிக்க ஜேர்மனி உதவியது. இதனால் இந்த நாடுகளை பகைத்து கொள்ளமால் உதவிகளை பெற்றுக்கொள்ளும் சூட்சுமங்களை நாம் கையாள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கட்டைக்காடு அபிவிருத்திக்கான திட்டங்கள் துரிதகதியில் முன்னெடுப்பு

## யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கட்டைக்காடு உள்ளிட்ட அதனை அண்டிய பிரதேசத்தின் அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்கு அப்பிரதேசங்களில் நடைமுறைப்படுத்துகின்ற அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மருதங்கேணிப் பிரதேச செயலக பிரிவிலுள்ள கட்டைக்காடும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் மீள்குடியேற்றப்பட்ட மக்களது தேவைகளையும் பிரச்சினைகளையும் ஆராய்ந்து தீர்வு காணும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்றது. அங்கு அவர் மேலும உரையாற்றுகையில்,

இறுதியாக மீள்குடியேற்றப்பட்ட கட்டைக்காடும் அதனை அண்டிய கிராமங்களினதும் அடிப்படைத்தேவைகளை துரிதமாக நிவர்த்திசெய்ய வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. மக்களுக்கான கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வீடமைப்பு போன்ற அனைத்துத் தேவைகளையும் விரைவாக நிவர்த்தி செய்ய வேண்டும். அப்போதுதான் ஏனைய கிராமங்களின் அபிவிருத்திச் செயற்பாட்டுடன் இக்கிராமங்களும் இணைந்து பயணிக்க முடியும்.

எனவே மக்களுக்காக இயங்கும் அரசின் அனைத்து நிர்வாகச் செயற்பாடுகளும் இப்பகுதி மக்களின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி துரிதமாகச் செயற்பட வேண்டும். மீள்குடியேற்ற மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் விடையத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், ஆளுநரும் மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றார்கள். எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாழ்வியல் முன்னேற்றத்திற்காக காத்திருக்கும் இம் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய அனைவரும் முன்வரவேண்டும்.

இதில் மக்களின் தேவைகளை மக்கள் பிரதிநிதிகளூடாகக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், அதனோடு தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்துரையாடி அவ்விடத்திலேயே தீர்வினையும் பெற்றுக்கொடுத்தார்.

மக்களின் சுகாதாரம் தொடர்பான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அப்பகுதியில் அமைந்துள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தைப் புனரமைப்பதெனவும் குடம்பநல மாதுக்கள் அப்பகுதிக்கே வருகை தந்து பணியாற்றவேண்டுமெனவும் அத்தோடு நடமாடும் மருத்துவ சேவையினை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, அப்பகுதி மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகளை அமைப்பதெனவும், குறித்த நேரத்திற்குள் ஆசிரியர் மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிப்பதற்கேற்ற வகையில் பேருந்துச் சேவையினை மேற்கொள்வதெனவும், உள்ளக ஆசிரியர் இடமாற்றங்களினூடாக ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதெனவும் முடிவுகள் எட்டப்பட்டன.

அப்பகுதி வீதிகளை மக்களின் இலகு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் உடனடிப் புனரமைப்பிற்கு உட்படுத்துவதெனவும், இருப்பிடங்கள் தொடர்பாக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பக்க அழிவுகளுக்குள்ளாகியுள்ள வீடுகளை உடனடியான புனரமைப்பதெனவும், ஏனையோருக்கான வீடுகளை நடைமுறையிலுள்ள வீட்டுத்திட்டத்தினூடாக விரைவாக அமைத்துக் கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, மீன்பிடி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மீனவர்களுக்கு இலகு கடன்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும், விவசாயச் செய்கைக்கான உதவிகளை உடனடியாக வளங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அத்தோடு மக்களின் ஏனைய தேவைகளும் ஒவ்வொன்றாக ஆராயப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்குரிய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், அருட்தந்தை யஸ்ரின், அருட்தந்நை ஜேசுரட்ணம், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் சஞ்சீவன், ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன், ஈ.பி.டி.பி.யின் சர்வதேச தொடரபாளர் மித்திரன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் ஆகியோரும் மற்றும் அரச திணைக்களங்களின் அதிகாரிளும், அரச, சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (29)

## சிறுவர் துஷ்பிரயோகம் விழிப்புணர்வுக் கண்காட்சி

(பருத்தித்துறை)

லீட்ஸ் என்ற பொது அமைப்பு யாழ்.மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அமைப்புடன் இணைந்து நடாத்தும சிறுவர் உரிமைகள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சியும் விற்பனையும் எதிர் வரும் 8, 9, 10 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் 6 மணிவரை நடைபெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி மைதான சுற்றாடலில் மெதடிஸ்த திருச்சபை வளாகத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இக்கண்காட்சியில் மாற்று வலுவுள்ளவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சியும் விற்பனையும் மற்றும் பாடசாலைப் புத்தகம் மற்றும் உபகரணங்கள், சிறுவர் புத்தகங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் அடங்கிய சிறப்பு விற்பனைக் கூடமும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இக்கண்காட்சிக்கு வருகை தரும் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் அறிவுத் திறன்சார் போட்டிகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டு அதற்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக லீட்ஸ் நிறுவன மாவட்ட அதிகாரி தெரிவித்துள்ளார். (109)

## சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் பிரிவுக்கும், புற்றுநோய்ப் பிரிவுக்கும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10.05 மணிக்கு யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் புற்றுநோய்ப் பிரிவுக்கு 2 குளிரூட்டி இயந்திரங்களும், குழந்தைப்பிரிவுக்கு 2 மருத்துவ இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளதுடன் இந்நிகழ்வில் லயன் சந்திரகலா சில்வேஸ்ரர், லயன் கே.எம்.பத்மநாதன், லயன் வி.தியாகராசா, குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர் கே. அருள்மொழி, யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் திருமதி பி.பசுபதிராஜா, லயன் இம்மானுவேல் ஜோசப், லயன் எஸ்.ஜெயவத்சலன், சர்வதேச லயன் கழகப் பணிப்பாளர் லயன் சுனில் வட்டவல, லயன் பிரியந்த பெர்ணாண்டோ, ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சட்டவிரோத மது விற்பனை தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(வடமராட்சி)

நெல்லியடிப் பகுதியில் சட்டவிரோதமாக இடம்பெறும் மது மற்றும் சிற்றுண்டி விற்பனையாலும மது பாவனை நடவடிக்கைகளாலும் அப்பகுதிப் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை எல்லைக்குள் நெல்லியடி கிழக்குப் பகுதியில் இருக்கும் லக்சுமி ஒழுங்கை பல ஆண்டு காலமாக கழிப்பிடமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் இப்பகுதியில் இரவு பகலாக சட்டவிரோத மது விற்பனையும் இடம்பெற்று வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதைவிட ஒழுங்கையால் பயணிப்போரை மதுப்பிரியர்கள் மது அருந்திவிட்டு தகாத வார்த்தைகளால் பேசுவதுடன் தகராறிலும் ஈடுபடுவதாகவும் இதனால் அப்பகுதியூடாகச் செல்லும் பொதுமக்கள் அச்சத்துடன் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இப்பகுதிகளில் வண்டிகளில் சிற்றுண்டிகள் விற்போரும் இங்கு வந்து சிற்றுண்டி மட்டுமல்லாது மதுப்பிரியர்களுக்கு காரசார சிற்றுண்டிகளும் விற்பனை செய்யப்படுவதால் அதன் எச்சங்களும், மதுப் போத்தல்களும் பரவிக காணப்படுவதால் அதிகாலையில் அப்பகுதியால் செல்வோர் துர்நாற்றத்தின் மத்தியில் தாம் செல்வதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து ஓர் அமைதியான சூழலை ஏற்படுத்தித் தருமாறு இப்பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (116)

## நாவாந்துறை கிறிஸ் பூத வழக்கு மே மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை கிறீஸ் பூத வழக்கை மே மாதம் 7ஆம் திகதிக்கு மேலதிக மாவட்ட நீதிபதி மா.கணேசராசா ஒத்திவைத்தார்.

யாழ்.மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நாவாந்துறையில் கிறிஸ், பூதம் காரணமாக பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது.

இதன்போது 100 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டதுடன், யாழ்.பொலிஸாரினால் யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

விசாரணையின் பின்னர் 100 இளைஞர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பான சட்ட மா அதிபரின் அறிவுறுத்தல்கள எதுவும் கிடைக்கப்படவில்லை.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நாவாந்துறையைச் சேர்ந்த 100 இளைஞர்களும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

யாழ்.தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன்சிகேரா தலைமையிலான பொலிஸார் மன்றில் ஆஜராகியதுடன், 4 பேர் கொண்ட சட்டத்தரணிகளும் இவர்கள் சார்பாக ஆஜராகியிருந்தனர். இதன்போது குறித்த வழக்கு மே மாததிற்கு ஒத்திவைக்கப்பட்டது. (எஸ்)

## கருத்தரங்கு

(குருநகர்)

சர்வதேச மார்க்சியக் குழுவின் ஏற்பாட்டில் சமகால அரசியல் ஒரு பார்வை என்னும் விடயம் பற்றி கருத்தரங்கு இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு முதலாம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள டி.சி.எம்.தனியார் கல்வி நிறுவனத்தில் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில்) ஏ.சி. ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப உரையை சொ.சிவபாலன் (சிற்பி) நிகழ்த்துவார். தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வலர்களைச் சமுகம் தரும்படி கேட்கப்படுகின்றனர்.

## அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் கௌரவிப்பும் பரிசளிப்பு நிகழ்வும்

(அளவெட்டி)

அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் 94ஆவது பொதுக் கூட்டமும் மற்றும் கௌரவிப்பும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த 03 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் மகாஜன சபை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் க.நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகவும், இந்துசமயத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் சிவமகாலிங்கம், அளவெட்டி மகாஜன சபையின் தலைவர் வை.சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொணடனர். இந்நிகழ்வில் சைவ வாலிப சங்கம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்திய போட்டிகளில வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட செஞ்சொற் செல்வருக்கு அளவெட்டி சமூகத்தின் சாரபில் கௌரவம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சைவ வாலிப சங்கத்துக்குப் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது.



## சர்வதேச கண்ணழுத்த வாரம்

(யாழ்ப்பாணம்)

உலகளாவிய ரீதியில் சர்வதேச கண்ணழுத்த வாரம் மார்ச் 11 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுகிறது. இவ்வாரத்தையொட்டிய தேசிய நிகழ்வு எதிர்வரும் 13ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நாட்டின் பல பாகங்களிலிருந்து பல கண் வைத்திய நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். சர்வதேச கண்ணழுத்த வாரத்தை முன்னிட்டு பொதுமக்கள் மத்தியில் கண்ணழுத்த நோயைக் கண்டறிவதற்கான பரிசோதனை நிகழ்ச்சித் திட்டமொன்று பார்வை 2020 திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை 2000 பொதுமக்களை இவ்விசேட நிகழ்ச்சித்திட்டத்தில் பரிசோதனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. முக்கியமாக நீரிழிவு நோயுள்ளவர்களும், குடும்பத்தில் கண்ணழுத்த நோய்ப் பிரச்சினை உள்ளவர்களும், 40 வயதுக்கு மேற்பட்ட பொது மக்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு தம்மைப் பரிசோதித்துக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் மேலும் ஒரு தொகுதி மக்கள் மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒரு தொகுதி மக்கள் எதிர்வரும் 9ஆம்திகதி அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த் தப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள கொக் கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு மற்றும் கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் தெற்கு ஆகிய 6 கிராம அலு வலர் பிரிவுகளைத் தவிர்ந்த ஏனைய கிராம அலுவலர் பிரிவு களைச்சேர்ந்த மக்களே மீள்குடி யமர்த்தப்படவுள்ளனர்.

இதன்படி மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மக்களில் தற்போது உறவி னர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் மக்கள் மீள்குடி யமர விருப்பமாயின் அன்றைய தினம் காலை 9 மணிக்கு வித்தி யானந்தக் கல்லூரிக்கு வருகை தருமாறும், வரும்போது இது வரை காலமும் வசித்த கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன அப்பகுதி பிரதேச செயலகரின் கையொப்பமிடப்பட்ட பதிவு நீக் கக்கடிதத்தினையும் தவறாது கொண்டு வந்து சமர்ப்பித்து மீள் குடியேற்றப் பதிவினை மேற் கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேத நாயகன அறிவித்துள்ளார்.(04)

# முல்லைத்தீவு உள்ளூராட்சி மன்ற ஆளணியை அதிகரிக்க அறிவுறுத்தல்


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் ஆள ணியினரை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் உள்ளூராட்சி மன்ற செயலாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள், அபிவிருத்தி உதவி யாளர்களாகவும் வருமான மேற்பார்வையாளர்கள் வருமான பரிசோ தகர்களாகவும் ஆகிய பதவிப் பெயர்களில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற முல்லைத்தீவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணியினரை அதிகரிப்பதற்கான கூட்டத்தின் போதே இத்தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (141)

# பரமர் சங்கமம்



தமிழர் பாரம்பரியத்தில் சடங்குமுறைகள் அபரிமித மாவை. திருமணத்தில் இருந்து குழந்தைக்கு காது குத்துற வரையில் மரணத்தில் இருந்து ஆண்டுத்திவசம்செய்யும் வரை யில் எண்டு எண்ணுக்கணக் கில்லாத சடங்குகள் இருக்கின்றன. ஆனாலும் இண்டைக்கு அது எதனையும் சடங்கு எண்டு சொல்லுற வழக்குக் குறைஞ்சே போச்சுது. புதுமனைப்புகுவிழா, நல்விவாக முகூர்த்தம், பூப்புனித நீராட்டுவிழா, என எல்லாமே பெயர் மாற்றம் பெற்றுள்ளன.

இதனிடையே பணச்சடங்கு என்ற ஒன்றும் நடைமுறையில் இருக்கின்றது. இதனையும் 'அற்ஹோம்' என்கின்றார்கள். அற்ஹோம் என்னும் பணச்சடங்குகள் அக்காலத்தில் தமிழர் நாகரிகத்தில் கொடிகட்டிப் பறந்ததாக அறியமுடிகின்றது.

ஆனால் இன்றைய இளைய சமுதாயத்தில் அறியப்படாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. யாழ்ப்பாணக் குடா நாட்டுக் கிராமங்கள் பலவற்றில் அது வழக்கொழிந்து போயுள்ளதைக் காணமுடிகின்றது.

ஆயினும் இன்றைக்கும் கரையோரக் கிராமங்களான குருநகர், நாவாந்துறை, பாசையூர் ஆகிய கிராமங்களில் இந்த அற்ஹோம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது கண்கூடு.

அதனிலும் குருநகர் கிராம மட்டத்தில் இச் சடங்கு முன்னர் இருந்ததை விடவும் மென்மேலும் வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. ஒரு வாரத்தில் ஒருவர் என்றிருந்த பணச்சடங்கு ஒரு வாரத்தில் பத்துக்கும் மேற்பட்டவர்களால் நடத்தப்படுகின்ற நிலைமை தோன்றியுள்ளது.

அக்காலங்களில் சனிக்கிழமைகளில் நடைபெற்று வந்த அதுவும் ஒருவர் வீட்டில் நடைபெற்று வந்த அற்ஹோம் புதன் கிழமைகளிலும் நடைபெறத் தொடங்கிவிட்டது. அதே வேளை ஒரு நாளிலேயே நான்கு வீடுகளுக்கும் அதிகமாக நடத்துகின்ற அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

இந் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளவென குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி என்னும் அமைப்பே செயற்பட்டுக்கொண்டிருந்தும் அற்ஹோம்களின் எண்ணிக்கைகளை மட்டுப்படுத்த முடியாமல் திணறும் நிலை கூட ஏற்படுகின்றது.

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி என்னும் அமைப்பு அக்கிராமத்தில் அமைந்துள்ள இருபதுக்கும் மேற்பட்ட சனசமூக மற்றும் விளையாட்டு, மாதர் அமைப்புக்களை உள்ளடக்கி பிரதிநிதித்துவப்படுத்த அமைத்த போதும் இப்பொழுது இந்த அற்ஹோம் பணச்சடங்குகளை மட்டுப்படுத்தவென்றே தனியாக இயங்கத் தொடங்கியுள்ளது.

வாரத்தில் சனி, புதன்கிழமைகளில் நடைபெற்றுக் கொண் டிருக்கும் பத்துவரையான பணச்சடங்குகளும் மேற்படி அமைப்பின் அனுமதி பெற்றே நடைபெறுகின்றன.

அல்லாமல் அற்ஹோம் நடத்த முடிவதில்லை என்றால் பாருங்களேன். இந்தப் பணச்சடங்குகள் எம்மிடையே தமிழ் நாட்டிலிருந்தே கொண்டுவரப்பட்டதென்றால் அதுவும் விசித் திரம்தான்.

தமிழகத்தில் மொய்வைத்தல் மொய்ச்சடங்கென இன்றைக்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே ஆரம்பித்து இன்றும் நடைமுறையில் இருந்து வருவதான வரலாற்றுக் கட்டுரை ஒன்றைச் சமீபத்தில் பரமர் வாசித்ததன் எதிரொலி தான் இது; இருக்காதே பின்ன...

# இனந்தெரியாத நோயினால் கோழிகள் இறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சுய உதவிக் காக வழங்கப்பட்ட கோழிகளில் பெரும்பாலானவை இனந்தெரி யாத நோயினால் இறந்துள் ளதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவிததுள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங் களினால் யுத்தத்தினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கென கால்நடை வளர்ப்பு, வீட்டுத் தோட்டம் உள்ளிட்ட சுய தொழிலுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சுயதொழில் உதவிக காக வழங்கப்பட்ட கோழிகளே இனம் தெரியாத நோயினால் இறந் துள்ளதாக தெரியவரு கின்றது. இதனால் பொது மக்கள் அதி களவில்பாதிக்கப்பட்டுள்ளனர்.

# மாசிமக திருவிழா

(வலிகாமம்)

சுன்னாகம் அருள்மிகு பழனி முருகன் ஆலய மாசிமக திரு விழா இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

இன்றைய தினம் காலை விசே பூசைவழிபாடுகள், பஜனை என்பனவும் இடம்பெறும் (06)

# சிறப்புமலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இடம்பெறும் மகா கும்பாபிஷேகத்தையொட்டிய சிறப்பு மலர் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட் கிழமை இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நம்பினோர்க் கருளும் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் என்னும் விடயம் பற்றி கலாநிதி கனகசபாபதி நாகேஸ் வரன் சிறப்பு சொற்பொழி வாற்றவுள்ளார்.

ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 13ஆம் திகதி நடை பெறவுள்ளது.

# புதிய நிர்வாகம் தெரிவு

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க சம்மேளனத்தின் வருடாந்த கூட்டம் அண்மையில் நடை பெற்றது.

இக் கூட்டத்தில் பா.ரகுநாதன் தலைவராகவும், கு.ரவீந்திரன் செயலாளராகவும். அ.பரஞ்சோதி பொருளாளராகவும், தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 6 நிர் வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (109)



பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தினரின் ஏற்பாட்டில் அண்மையில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித் தியாலயத்தில் நடைபெற்ற இலவச நடமாடும் சேவையில் இராணுவத்தினர் இரத்ததானம் செய்வதைக்காணலாம். (116)

# வீதியில் தொங்கும் மின்வயர்கள் கவனித்து செயற்படுவார்களா?

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேசத்தில் பல இடங் களில் மின் வயர்கள் அறுந்து தொங்கியவாறு மிகவும் ஆபத் தான நிலையில் காணப்படு வதாக அப்பகுதிப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் மின் வயர்கள் கீழாகப்பதிந்து காணப்படுவதால அதனூடகச் செல்லும் வாகனங் களாலேயே மின் வயர்கள் அறுக கப்படுவதாகக் குறிப்பிடப்படும் நிலையில் மின்சார சபையிடம் இது பற்றித்தெரிவிக்கும் போது வாகனங்களைச் செலுத்துவோர் இதற்கு நஷ்டஈடு வழங்கினால் தாம் அவற்றை சீர்செய்து தரு வதாக கூறுவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதியில் தொங்கிக்கொண் டிருக்கும் மின் வயர்களால் பாதிக் கப்படுவது பொதுமக்கள் என்பதை யார் கவனத்தில் கொள்வது? என அவர்கள் கேள்வி எழுப்பு கின்றனர்.

இதனால் ஏற்படும் அபாயத் தைக் கருத்திற் கொண்டு மின் சார சபை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப் பகுதிப்பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (141)

# மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 12ஆம்திகதி யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டகிராம அபிவி ருத்தித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கூட்டத்திற்கு 60 அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத் தித்திணைக்கள அதிகாரி தெரி வித்துள்ளார். (எஸ்)

# முரசின் இன்றைய பலன்

[07.03.2012 –புதன்கிழமை]

கர வருஷம் மாசி மாதம் 24 ஆம் திகதி. சதுர்த்தசி மாலை 5.40 வரை. நட்சத்திரம் மகம் முன்னிரவு 9.10 வரை. சித்தாமிர்தம் மாசிமகம் நடேசர் அபிஷேகம்.

இராகுகாலம் 12.24 - 1.54 வரை. சுபநேரம் 4.54 - 6.24 வரை.

எமகண்டம் 7.54 - 9.24 வரை. குளிகைகாலம் 10.54 - 12.24 வரை. போயாதினம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தனவரவு, கூட்டுத்தொழிலால் நன்மை, மனதில் திருப்தி, உடல் நலனில் கவனம். |
| ரிஷபம் | புத்திமேன்மை, குடும்பத்தில்பிரச்சினை, வெளி நாட்டு வாய்ப்பு, நிலுவைகள் கிடைக்கும். |
| மிதுனம் | தாராள சிந்தை, புரட்சித்திருமணவாய்ப்பு, எதிர்பாராத பணவரவு, பிரித்தவர்கூடுவர். |
| கடகம் | எதிர்ப்புகள், பயணவெற்றி, கருத்துமுரண் பாடுகள், முதலீடுபெருகும். |
| சிம்மம் | மனதில் சஞ்சலம், பொது வாழ்வில் மதிப்பு, கடன்தொல்லை நீங்கும், புதிய முதலீடுகள். |
| கன்னி | நல்ல தகவல், காரியானுகூலம், வைத்தியச் செலவு, உறவினரால் செலவு. |
| துலாம் | வாகனசுகம், ஆரோக்கியம், சகோதர வழியில் கஷ்டம், தர்மகாரியங்கள். |
| விருச்சிகம் | அதிகாரி அனுகூலம், இலாபதினம், பணப்புழக்கம், புத்திரபாக்கியம். |
| தனுசு | தெய்வ அனுகூலம், விருந்தினரால் சங்கடம், விதண்டாவாதம், போக்குவரத்தில் கவனம். |
| மகரம் | பயணம் விலக்கவும், அனுசரித்து நடக்க வும், வேலைவாய்ப்பு, மாமியாருடன் மோதல். |
| கும்பம் | நண்பருடன் மகிழ்ச்சி, எதிர்பாராத செய்தி, வெளிநாடுசெல்லும்வாய்ப்பு, பணிச்சுமை. |
| மீனம் | ஸ்தலவழிபாடு, முதலீடுகளில் கவனம், கருத்து முரண்பாடு, விரோதிகள் மடக்கம். |

# டோனி எடுக்கும் முடிவுகள் ஒரு பக்கச் சார்பானதா?

## சந்தேகம் கொள்கிறார் கபில்



இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவரான டோனி எடுக்கும் முடிவுகள் தவறாக அமைவதாகத் தெரிவித்த கபில் தேவ், சில சமயங்களில் டோனி ஒரு பக்கச்சார்பாகச் செயற்படுவது போன்று தெரிவதாகவும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஒரு அணித்தலைவர் நேர்மையாக நடப்பதோடு, நேர்மையாக இருப்பதை வெளிப்படுத்துதலும் அவசியம், எனவும், அண்மைக் கால டோனியின் முடிவுகள் அவர் மீது சந்தேகங்களை எழுப்புவதாகவும் தெரிவித்தார்.

இங்கிலாந்து, அவுஸ்ரேலியத் தொடர்களின்போது தொடர்ந்து சறுக்கிய சுரேஷ் ரெய்னாவிற்குத் தொடர்ச்சியாக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டது.

அவுஸ்ரேலியத் தொடரின் போது அணியுடன் அங்கு சென்றிருந்த மனோஜ் திவாரிக்கு எந்தவித வாய்ப்புகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மனோஜ் திவாரி - இந்தியா சார்பாக இறுதியாகப் பங்குபற்றிய சர்வதேச ஒரு நாள் போட்டியில் அழுத்தங்களுக்கு மத்தியிலான சதமொன்றைப் பெற்றிருந்தார். அத்தோடு இங்கிலாந்துச் சுற்றுலாவின்போது ஷகீர் கான் காயமடைய ஐக்கிய அமெரிக்காவில் சுற்றுலாவைக் களித்துக்கொண்டிருந்த ஆர்.பி.சிங் மீள அழைக்கப்பட்டு நேரடியாக வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் அணியோடு இங்கிலாந்துக்குச் சென்றிருந்த முனாப்பட்டேலுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவிலலை.

இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி மிகச்சிறந்த பயிற்றுவிப்பாளராகும் தகுதிகளைக் கொண்டிருப்பதாகவும், எனினும் இந்திய வீரர்கள் எவரும் அதை விரும்ப மாட்டார்கள்இந்திய வீரரொருவர் அணியின் பயிற்றுவிப்பாளராகினால் அணிக்குள் அதிக தலையீடுகள் ஏற்படுத்தப்படும் என இந்திய வீரர்கள் அஞ்சுவார்கள் எனவும் தெரிவித்த அவர், இந்திய பயிற்றுவிப்பாளர்களை எதிர்க்கும் இந்தப் பழக்கம் சௌரவ் கங்குலியினாலேயே ஏற்படுத்தப்பட்டது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

# மெய்வல்லுநர் போட்டி விண்ணப்பம் கோரல்

எதிர்வரும் ஜூன் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள 15ஆவது கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தேர்வுப் போட்டிகள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டுச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள கனிஷ்ட பிரிவிற்கான மெய்வல்லுனர் போட்டிகள் எதிர்வரும் 24 மற்றும் 25ஆம் திகதிகளில் கொழும்பிலுள்ள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டுத் திடலில் இடம் பெறவுள்ளது.

20 வயதிற்கு உட்பட்ட இருபாலரும் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியும் என மெய்வல்லுனர் விளையாட்டுச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் போட்டிகளில் திறமையினை வெளிப்படுத்தும் வீர வீராங்கனைகள், ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொள்ள தெரிவு செய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தெரிவுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோரின் விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டுச் சங்கம் தெரிவித்துள்ளது.

# தலைவர் பெயர் இல்லாமல் பங்களாதேஷ் அணி அறிவிப்பு

(டாக்கா)

எதிர்வரும் 11 ஆம் திகதி முதல ஆசிய கிரிக்கெட் கிண்ணப் போட்டி பங்களாதேஷில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம் ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன.

இந்தப் போட்டியினை நடத்தும் நாடான பங்களாதேஷ் இந்தப போட்டியில் விளையாடும் 15 பேர் கொண்ட அணியை நேற்று அறிவித்துள்ளது. இதில் கப்டன், மற்றும் துணைக் கப்டன் உள்ளிட்ட பதவிகள் யாருக்கும் வழங்கப்படாமல் அணியை அறிவித்துள்ளனர்.


பங்களாதேஷ் அணி விபரம் வருமாறு: அப்துர் ரஸாக், அனாமுல்ஹக், எலியாஸ் சன்னி, இம்ருல் கையேஸ், ஜஹ்ருல் இஸ்லாம், மஹ்மத் துல்லா, மஷ்ரபி மொர்டாஸா, முஸ் பிகுர் ரஹீம், நசீர் ஹொசைன், நஸிமுத்தின், நஸ்முல் ஹொசைன், ஷகாதத் ஹொசைன், ஷபியுல் இஸ்லாம்.

பங்களாதேஷ் அணி மார்ச் 11 அன்று பாகிஸ்தானுடனும், மார்ச் 16 அன்று இந்தியாவுடனும், மார்ச் 20 அன்று இலங்கையுடனும் விளையாடுகிறது. இறுதிப் போட்டி மார்ச் 22 நடைபெறுகிறது.

ஆசியக் கோப்பைக்கான அனைத்து போட்டிகளும் மிர்பூரிலுள்ள ஷேர் இ பங்களா ஸ்ரேடியத்தில் நடைபெற உள்ளது.

# விடைபெறுகிறார் பவுச்சர்

(ஜோகன்னஸ்பேர்க்)



இங்கிலாந்து தொடருக்குப்பின் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வுபெறப் போவதாக தென்னாபிரிக்க விக்கெட் காப்பாளர் மார்க் பவுச்சர் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணி எதிர்வரும் ஜூலை மாதம் இங்கிலாந்து செல்ல உள்ள நிலையில் ஓய்வு குறித்து பவுச்சர் கூறியுள்ளதாவது:

இப்போது எனது உடல் நிலையில் சிறிது சோர்வு ஏற்படத் தொடங்கிவிட்டது. எனவே இங்கிலாந்து தொடருடன் ஓய்வு பெற்று விடலாம் எனத் திட்டமிட்டுள்ளேன். ஏற்கனவே 3 முறை இங்கிலாந்துக்குச்சென்று விளையாடியுள்ளேன். எனவே எனது அனுபவம் எதிர்வரும் தொடரில் தென்னாபிரிக்காவின் வெற்றிக்குக் கைகொடுக்கும் என்று நம்புகிறேன் என்றார்.

# மண்டேலா வெற்றிக் கிண்ணத்திற்கு தென்னாபிரிக்கா செல்லும் இந்திய அணி

ருவெண்ரி ருவெண்ரி போட்டியொன்றில் பங்கேற்பதற்காக இந்திய அணி - தென்னாபிரிக்காவுக்கு இம்மாத இறுதியில் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இம்மாதம் 30ஆம் திகதி இடம் பெறவுள்ள ஒற்றை ருவென்ரி ருவென்ரி போட்டி வொண்டரர்ஸ் மைதானத் தில் இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டி ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்று எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு "மண்டேலா வெற்றிக்கிண்ணம்" வழங்கப்படும எனவும் அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டும் தென்னாபிரிக்க, இந்திய அணி டேர்பன் மைதானத்தில் இவ்வாறான ருவெண்ரி ருவெண்ரி போட்டியில் பங்குபற்றியிருந்தன. இந்தப் போட்டி தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் மக்காயா நிற்னியின் பிரியாவிடைப் போட்டியாக அமைந்திருந்தது. இனி வரும் காலங்களில் இவ்வாறான ஒன்றை ருவெண்ரி ருவெண்ரி போட்டிகள் வருடாந்தம் நடாத்தப்படும் என தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தப் போட்டி தொடர்பான செய்திகளை உறுதிப்படுத்திய இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதான நிர்வாக அதிகாரி ரட்னாக்கர் ஷெட்டி, இந்தியக் கிரிக்கெட் சபை தங்களது முதற்தெரிவு வீரர்களை இந்தப் போட்டிக்காக தென்னாபிரிக்காவிற்கு அனுப்பும் எனவும் தெரிவித்தார்.

# தொடர்ச்சியான பெறுபேறுகளை பாகிஸ்தான் அணி பெற வேண்டும்

## தனது முதல் இலக்கு இது என்கிறார் வட்மோர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியைத் தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத் தும் அணியாகப் பேணுவதே முதல் இலக்கு என பாகிஸ்தான் அணியின் பயிற்று விப்பாளராக நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றுள்ள டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாள ராகடேவ் வட்மோரும், களத்தடுப்புப் பயிற்றுவிப்பாளராக ஜூலியன் பௌண்டினும் நியமிக்கப்படுவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விடுத்தது. அதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டிலேயே டேவ் வட்மோர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



பாகிஸ்தான் கிரிக்கெட் சபை போன்ற மிகச் சிறந்த கிரிக்கெட் சபையுடன் இணைந்து பணியாற்றுவதில் தானும் பௌண்டினும் பெருமையடைவதாகத் தெரிவித்த டேவ் வட்மோர், தனது செயற்பாடுகள் அனைத்தும் பாகிஸ்தானை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்கான செயற்பாடுகளாகவே அமையும் எனவும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானின் பந்துவீச்சு வளங்களைப் பார்வையிட்டதாகவும், ஏராளமான மிகச் சிறந்த பந்துவீச்சாளர்கள் பாகிஸ் தானில் காணப்படுவதாகவும், அதுகுறித்து மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சியான பெறுபேறுகளே தங்களது சவால் எனத் தெரிவித்த டேவ்வட் மோர், ஒரு போட்டியில் அபாரமான வெற்றியும், இன்னொரு போட்டியில் மோசமான தோல்வியும் கொண்ட முடிவுகளை வழங்க விரும்பவில்லை எனத்தெரிவித்ததோடு - இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் பலமான அணிகளாகக் காணப்படுகின்ற நிலையில், பாகிஸ்தானும் அந்த நாடுகளுக்கு இணையான நாடாக பலமாகக் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

# மேற்கிந்திய முன்னாள் வீரர் கார் விபத்தில் பலி



மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் றுனாக்கோ மோர்ட்டன் - கார் விபத்தில் சிக்கி இறந்து விட்டதாக மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வீரர் வவெல் ஹின்ட்ஸ் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிககும் போது றுனாக்கோ மோர்ட்டன் தெரிவித்துள்ளார.

"றுனாக்கோ மோர்ட்டன் குறுகிய காலத்திலேயே நீண்ட தூரம் நோக்கிச் சென்றுவிட்டார். அவருடனான ஞாபகங்கள் என்றும் பொக்கிஷமாக இருக்கும் ஆத்மா சாந்தியடைவதாக. கடவுளே அதிகம் அறிவார்" என வவெல் ஹின்ட்ஸ் தனது ட்விற்றர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

றுனாக்கோ மோர்ட்டனின் இழப்புத்தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கிறிஸ்கெயில் " நாங்கள் உண்மையான போராளியொருவரை இழந்திருக்கிறோம். அவரது ஆத்மா சாந்தியடைவதாக. அவருடனான ஞாபகங்கள் என்றும் என்னுடன் காணப்படும். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்" எனக் குறிப்பிட்டார்.

# 106 ஆவது வடக்கின் பெரும்போர் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

**மத்திய கல்லூரி அணி விபரம்**

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூனறு நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டி நாளை முதல் மூன்று தினங்களுக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.


யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்று வரும் இந்தப் போட்டி 106ஆவது ஆண்டாக நடைபெறவுள்ளது.


இரு அணிகளுக்குமிடையில் கடந்த 1904ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இந்தப்போட்டி, தேசிய ரீதியில் முதன்மை பெற்றதுடன் மிகப் பெரும் வரலாற்றைக் கொண்டதாகும்.


இந்தப் போட்டித் தொடரில் யாழ். மத்திய கல்லூரி அணி 27 வெற்றிகளைப் பதிவாக்கியுள்ளது. அத்துடன் கடந்த ஐந்து வருடங்களாக இந்தத் தொடரில் வெற்றிபெற்றுள்ளது.

அத்துடன் இந்த ஆண்டில் நடைபெற்ற போட்டிகளில் சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்தியுள்ளது. எனவே, இந்த 106ஆவது வடக்கின் பெரும் போர் ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


த.கோகுலன - அணியின் தலைவர்
இடது கை சுழல் பந்து சகலதுறை ஆட்டக்காரர்


பா.நிரோஜ
ஆரம்ப துடுப்பாட்ட வீரர்



மு.கபிலன்
ஆரம்ப துடுப்பாட்ட வீரர்



மு.கிஷாந்தன்
வலது கை வேகப்பந்து வீச்சாளர்







பூ.டர்வின்
சகல துறை ஆட்டக்காரர்



சி.லக்சன்
வலது கை மிதவேகப்பந்து வீச்சாளர்


சு.ரிஷாந்த ரூபன்
சகல துறை ஆட்டக்காரர்



ர.வதுசனன் - அணியின் உப அணித் தலைவர் ஆரம்ப வேகப் பந்து வீச்சாளர், சகல துறை ஆட்டக்காரர்


கு.யூலியஸ் கனிஷ்டன்
இலக்கு காப்பாளர்
வலது கை துடுப்பாட்ட வீரர்



ப.நிருபன்
வலது கை சுழல் பந்து வீச்சாளர்



சி.மதுசன்
வலது கை சுழல் பந்து வீச்சாளர்


மோ.சிறிவண்ணன்
வேகப்பந்து வீச்சாளர்,
வலது கை துடுப்பாட்ட வீரர்



சி.அலன்டிலோன்
பிரதி இலக்கு காப்பாளர்,
இடது கை துடுப்பாட்ட வீரர்


நி.நிரோஜ
மிதவேகப் பந்து வீச்சாளர்


சி.சௌமிதரன்
வலது கை துடுப்பாட்ட வீரர் ,
மிதவேகப்பந்து வீச்சாளர்


ர.சர்மிகன்
அதிரடி வலது கை துடுப்பாட்ட வீரர்


ப.நிரோஜன்
வலது கை துடுப்பாட்டம்,
மிதவேகப்பந்து வீச்சாளர்



# வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியை தோற்கடித்தது சென்.பற்றிக்ஸ்



(யாழ்ப்பாணம்)

24 ஆவது ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்துக்கான ஐம்பது ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 37 ஓட்டங்களால் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியைத் தோற்கடித்தது. வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் அணி 45.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. சென். பற்றிக்ஸ் அணி சார்பாக கே.குகபாலா 45,ஜே.கிளிங்ரன் 43, ஆர்.ஜக்சன் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சி.பாலராஜ் ம.நிலக்சன் ஆகியோர் தலா மூனறு விக்கெட்டைக் கைப்பற்றினர். 183 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி 47.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 145 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால் 37 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அந்த அணி சார்பாக எஸ். விபீஸ் 89 ய.மதிவருபன் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லிவிங்ரன், நிதர்ஷன், நோபேட், அஜித்டார்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

(20)

# வலி. வடக்கு மென்பந்தாட்டம்; சம்பியனானது அளவெட்டி மத்தி

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே இடம்பெற்று வரும் போட்டிகளில் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியொன்றில் அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

மல்லாகம் பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கமும் அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகமும் மோதின.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி 5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 56 ஓட்டங்களை பெற்றது.

இந்த அணியில் துடுப்பெடுத்தாடிய யதீசன் ஆட்மிழக்காது 29, ரகீம் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த அஜித் 24 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் மூன்று ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இவ்வணியில், அஜித் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் தயாளன் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கஜேந்திரன் ஒரு ஓவர் பந்து வீசி 2 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

# வேறொரு அரசின் விருப்பத்திற்கு செயற்படுகின்றதா கூட்டமைப்பு



(கொழும்பு)

தமது நாட்டில் தமக்கு வாக்களித்த மக்களின் விருப்பங்களைத் தாண்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேறொரு அரசாங்கத்தின் விருப்புக்காக அல்லது ஒரு குழுவின் தேவைக்காக செயற்படுகின்றதா? என்ற சந்தேகம் தற்போதைய நிலைமையில் எங்களுக்கு ஏற்படுகின்றது.

கூட்டமைப்பு மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு கடிதம் அனுப்பியமை கவலைக்குரிய விடயமாகுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதை தவிர்க்கும் பொருட்டு இல்லாத பிரச்சினைகளை உருவாக்க முயற்சிக்கின்றதா? என்ற சந்தேகம் எங்களுக்கு எழுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பு ஜெனிவா மனித உரிமைப் பேரவை உறுப்பு நாடுகளுக்கு கடிதம் அனுப்பியமை என்பன தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜெனிவா மனித உரிமைப் பேரவை விடயத்தில் மேற்குலகமும் பிரதான எதிரக் கட்சிகளும் இருந்த நிலைப்பாட்டைவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்புடன் செயற்பட்டுள்ளது என்று கடந்த வார ஆரம்பத்தில் அரசாங்கம் மகிழ்ச்சி தெரிவித்தது. கூட்டமைப்பின் நிலைப்பாட்டையும் நாங்கள் வரவேற்றிருந்தோம்.

ஆனால் ஒரே வாரத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மாற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமை தொடர்பில் நாங்கள் கவலையடைகின்றோம். அந்தளவுக்கு அவர்களின் நகர்வுகளில் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன.

முன்னர் தருஸ்மன் அறிக்கை வெளிவந்தபோது அதனைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தனர். பின்னர் கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு செயற்பட்டுக் கொண்டிருந்தபோது அதனை கடுமையாக விமர்சித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் மேற்குலகம் நல்லிணக்க ஆணைக் குழுவை விமர்சித்து வந்தன.

ஆனால் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் வந்ததும் அதனை தற்போது நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சிகளும் மேற்குலகமும் வலியுறுத்துகின்றன. இந்நிலையில் ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டத் தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்ளும் என்று தகவல்கள் ஆரம்பத்தில் வெளிவந்தன. ஆனால் ஜெனிவா கூட்டணித் தொடரல் கலந்துகொள்வதில்லை என்று கூட்டமைப்பு தீர்மானித்ததாக அறிவிக்கப்பட்டது. அதனை நாங்கள் வரவேற்றதுடன் கூட்டமைப்பின் செயற்பாட்டை முன்னுதாரணமாக எடுக்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு குறிப்பிட்டோம்.

ஆனால் அவ்வாறு நாங்கள் கூறிய ஒரு வாரத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கும்படி கோரி மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளது. இது எம்மை கவலையடையச் செய்துள்ளது என அமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்துள்ளார.

## விளையாட்டு வீரர்களுக்கு இவ்வருடம் முதல் பட்டம்



(கொழும்பு)

நாட்டிலுள்ள திறமை மிகுந்த வீர, வீராங்கனைகள் சிலரை தெரிவுசெய்து அவர்களுக்குப் பட்டம பெற்றுக் கொள்ள வாய்ப்பு வழங்க வுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்படும் விளையாட்டு வீரர்களுக்கு இந்த வருடத்தில் நாவல திறந்த பல்கலைக்கழகத்தின் மூலமாக அடிப்படை பாடநெறிகள் கற்பிக்கப்பட்டு , அடுத்த வருடம் முதல் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன் பிறகு ஒவ்வொரு வருடமும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாகவும், ஒரு வருடத்தில் 5 வீரர்களுக்கு சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை கற்பதற்கு வாய்ப்பு வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார.

## சவுதியில் பணிபுரிபவர்களுக்கு சமூக பாதுகாப்புத் திட்டம்

(கொழும்பு)

சவுதிஅரேபியாவில் பல்வேறு தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்காக சர்வதேச மட்டத்திலான சமூக பாதுகாப்பு செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்தின் மூலம் தொழிலாளி நன்மையடைவதுடன் தொழில் கொள்வோரும் நன்மையடைவார்கள் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவிதுள்ளது.

இத்திட்டத்தில் 50 வயதிற்கு கீழ்ப்பட்டோர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதுடன் இயற்கை அல்லது திடீர் விபத்துக்களினால் பயனாளிகள் மரணமடைந்தால் அவருக்கு 15 ஆயிரம சவுதி றியால்கள் நஷ்டஈடாகவும் திடீர் சுகயீனம் காரணமாக நோய்வாய்ப்பட்டு வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறும் சந்தர்ப்பங்களில் நிதியுதவி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## குழந்தைகளுக்கான பால்மா விலை அதிகரிப்பு

(கொழும்பு)

நெஸ்லே லங்கா நிறுவனத்தால் தயாரிக்கப்படும் குழந்தைகளுக்கான பால்மாவின் விலை ஐம்பது ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி 400 கிராம் கொண்ட பால்மாவின் நன்-1 (Nan 1) விலை 970 ரூபாவிலிருந்து 1020 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

950 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட 400 கிராம் கொண்ட நன்-2 (Nan 2) ஆயிரம் ரூபாவாகவும் 930 ரூபாவுக்கு விற்பனை செயயப்பட்ட 400 கிராம் கொண்ட நன்-3 (Nan 3) 980 ரூபாவாகவும் அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளன.

## அதிகரித்துக் காணப்படும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்

(கொழும்பு)

இலங்கையில சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள பெருமளவில் அதிகரித்துள்ளதாகவும் கடந்த வருடத்தில் மட்டும் ஆயிரத்து 165 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகங்களை எதிர்நோக்கியதாகவும் சட்டத்தரணி கல்ணானந்த திராணகம தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றல் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தினமும் 5 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவர்களில் 3 பேர் சிறுமிகள் என கருத்தரங்கில் உரையாற்றிய கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக 2010 ஆம் ஆண்டில் ஆயிரத்து 54 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 2011 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் ஆயிரத்து 636 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டதாக அமரசூரிய கூறியுள்ளார்.

இவர்களில் 89 வீதமானவர்கள் சிறுமிகளாவர். இதனால், 18 வயதுக்கும் குறைந்த பெண்களுக்கும், ஆண்களுக்கும் திருமணம் செய்ய முடியாது என்ற சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும் பெண்கள் தம்து உடல் ரீதியான உணர்வுகளை கட்டுப்படுத்தவும், பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் கல்வி கட்டாயம் வழங்கப்பட வேண்டும் எனவும் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

பொலன் நறுவை, அனுராதபுரம், இரத்தினபுரி மாவட்டங்களிலேயே சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலிய வயது திருமணங்கள், பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அதிகமாக இடம்பெறுவதாகவும் கருத்தரங்கில் தெரியவந்தது.

## பரிந்துரைகளை அமுல்படுத்த ஐ.தே.க. பூரண ஒத்துழைப்பு

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்த முழுமையான ஆதரவு வழங்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்துவதன் மூலம் நாடு எதிர்நோக்கியிருக்கும் பாரிய பிரச்சினைகளுக்கு தீர்வுபெற்றுக் கொடுக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக அமுல்படுத்துவதாக அரசாங்கப் பிரதிநிதிகள் ஜெனிவாவில் உறுதியளித்துள்ளனர்.

காலத்தைத் தொடர்ந்தும் வீணடிக்காது, பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த மீண்டும் வேறும் குழுக்களை அமைத்து ஆராய வேண்டியது அவசியமில்லை.

பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு முன்னர் எதிர்க்கட்சிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தினால் அந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளத் தயார்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்றே நாட்டின் ஏனைய எதிர்க் கட்சிகளும் நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வு காண வேண்டுமென்று விரும்புகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பழவகைகளின் உற்பத்தியை உள்நாட்டில் அதிகரிக்க முடிவு



(கொழும்பு)

பழவகைகளை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் ஐயாயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவிடபபடுவதாக விவசாய அமைசசு தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் பயிரிடக்கூடிய சில பழவகைகளை தொடர்ந்தும் இறக்குமதி செய்வதன் மூலம் பெருமளவிலான பணம் செலவிடப்படுவதாக அமைச்சின் செயலாளர் விஜேரத்ன சகலசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் போதியளவு வாழைச் செய்கை இடம்பெறுகிறது. எதிர்வரும் காலங்களில் 65,000 மெட்ரிக்தொன் அன்னாசியைப் பயிரிட எதிர்பார்த்துள்ளோம். அன்னாசியை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணியை அதிகரித்துக் கொள்ள முடியுமென நினைக்கிறோம்.

மேலும் மாம்பழச் செய்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இறக்குமதி செய்யப்படும் தோடம்பழங்களுக்குப் பதிலாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தோடம்பழங்களின் நுகர்வை அதிகரிக்க எண்ணியுள்ளோம் என்று விவசாய அமைச்சின் செயலாளர் விஜேரத்ன சகலசூரிய மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் 200 தற்கொலைதாரிகள் சிவில் சமூகத்தில் மறைந்து வாழ்வு

(கொழும்பு)

யுத்தத்தின் இறுதிக் காலப் பகுதியில் ஒளிந்திருந்து தப்பியோடிய 200 பேர் வரையான புலிகள் இயக்க தற்கொலைப் பிரிவை சேர்ந்தவர்கள் பல்வேறு வகைகளில் நாட்டின் சிவில் சமூகத்தில் மறைந்து வாழ்வதாக புலனாய்வுப் பிரிவினருக்கு தெரிய வந்துள்ளதாக லங்காசி நிவ்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு மறைந்து வாழும் தற்கொலைப் படையாளிகள் முஸ்லிம் மற்றும் இந்து சமய பக்தர்கள் போன்று சமூகத்தில் மறைந்திருப்பதாக அண்மையில் கைது செய்யப்பட்டுள்ள இது போன்று மறைந்து வாழ்ந்த தற்கொலையாளிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் 100 பேர் வரையான பயங்கரவாதிகள் சுவிற்சர்லாந்து, இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு தப்பியோடியுள்ளதாகவும், அவர்கள் சர்வதேச பயங்கரவாதக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைதுள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

27) வேலையொன்றை 6 மனிதர்கள் 12 நாட்களில் செய்து முடிப்பர் எனில் 2 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
1. 6 நாட்கள்   2. 15 நாட்கள்   3. 36 நாட்கள்

**பொருத்தமான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

28) 24 மணித்தியாலயத்தைக் காட்டும் கடிகாரம் ஒன்று நள்ளிரவின் பின் 30 நிமிடங்கள் என்பதைக் காட்டும் சரியான வடிவத்தின் விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
1. 22 : 30   2. 12 : 30   3. 00 : 30   (..............................)

29) 2, 3, 5, 7, 9, 4 இவ் இலக்கங்களில் ஒரு இலக்கம் ஒருமுறை மட்டும் வரும் படியாக ஒற்றை எண்களின் கூட்டுத் தொகை யாது?
(..............................)

30) கொழும்பில் இருந்து கண்டி 40 கிலோமீற்றர் தூரமாகும் எனின், ஒரு மணிக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் கொழும்பில் இருந்து மோட்டார் சைக்கிளில் கண்டி சென்றடைந்தான். அவன் பயணம் செய்ய எடுத்த நேரம் எவ்வளவு?
1. 60 நிமிடம்   2. 30 நிமிடம்   3. 80 நிமிடம்   (..............................)

31) MOON — MONO
MEAT — MATE
SKIN — ......................

32) 7854 — 7584
3421 — 3241
1769 — ...................

33) ஒரு சதுரக் காணியில் ஒரு பக்கம் நின்று பார்க்கும்போது 8 தூண்கள் தெரியும் படியாக நான்கு எல்லைகளிலும் தூண்கள் நாட்டப்பட்டுள்ளன எனின், அக்காணியைச் சூழ எத்தனை தூண்கள் நாட்டப்பட்டுள்ளன?
1. 28   2. 20   3. 32

34) ○ + △ = 8
△ + □ = 7
○ + □ + △ = 12 எனின் ○ இன் பெறுமதியாக வரக் கூடியது,

1) 3   2) 4   3) 5

35) பெறுமதிக்கேற்ப ஏறு வரிசைப்படுத்தினால்,

1) ○ □ △   2) △ □ ○   3) □ △ ○

## கடந்த திங்கட்கிழமை வெளியான வெளியீடு - 36 கேள்விகளின் விடைகள்

01) 1. நரியும் முயலும்
2. சுற்றும் முற்றும்
3. வந்தன
4. காட்டில்
5. முயல்கள்
6. விழிப்பு
7. சிறுத்தை

02) 1. நாம் செய்திகளை அறிந்து கொள்வதற்கு செய்தித்தாள்கள் உதவுகின்றன.
2. கணினியின் மையச் செயலகம் மனிதனுடைய மூளைக்கு ஒப்பாகும்.

03) 1. நன்றி மறத்தல் கூடாது
2. சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாது

04) 1. நாத்திகன்   2. சிரஞ்சீவி

05) 1. வைத்தியசாலை   2. ஆகாயம்
3. அகவும்   4. மூக்கு   5. கேட்டல்

06) 1. Clouds   2. whater falls
3. Postaman   4. Stamp
5. Ballon   6. Window

07) 1. நீங்கள் எங்கே வசிக்கின்றீர்கள?
2. தயவுசெய்து எழும்புங்கள்
3. நான் உள்ளே வரலாமா?

08) 1. பச்சை நிறம்
2. நூல் நிலையம்

09) 1. உதைபந்து
2. வலைப்பந்து
3. பட்மின்ரன்
4. கரப்பந்து
5. கிரிக்கெட்

10) 1. R   2. R   3. R   4. R   5. R

11) 1. கைப்பிடி   2. மண்ணெண்ணை
3. துவிச்சக்கர வண்டி
4. ஒயில்
5. பொலித்தீன் / பிளாஸ்ரிக்

12) 1) 3   2) 2   3) 2   4) 3
5) 2   6) 1   7) 2   8) 3
9) 1   10) 3

13) 1. 600 பேர்
2. 360 பேர்
3. 240 பேர்   4. 282 பேர்
5. 90 பேர்   6. 3/5

14) 1. 10.5 சென்ரிமீற்றர்
2. 1) 44 சென்ரிமீற்றர்
2) 122 $cm^2$ / 120 சதுர சென்ரிமீற்றர்
3. 3075ml / 3 L / 75 ml
4. 4 செங்கோணங்கள்
5. 104 மாம்பழங்கள்
6. ரூபா 120   7. 0.2
8. 1) 108 பேர்   2) 2 பென்சில்
9. 5/8   10. 303



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I
1 மணி


# கல்வி முரசு


வெளியீடு 37


**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**1 ஆம் 2 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் மூன்று அடைப்புக்களில் ஒரு குறித்த முறையில் உருக்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று மட்டும் சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அதன் கீழ்க் கோடிடுக.**


01)



(01)



(02)


(03)

02)


(01)


(02)


(03)

03) 'மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல' என்ற பழமொழிக்குப் பொருத்தமான சந்தர்ப்பம் பின் வருவனவற்றில் எது?
1. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவருக்குப் பெற்றோர் ஆறுதல் கூறியமை
2. விளையாட்டில் காயப்பட்ட மாணவனுக்கு ஊசி மருந்து ஏற்றியமை
3. நோய்வாய்ப்பட்ட தந்தையை இழந்த சிறுவன் சுனாமியால் தாயையும் இழந்தமை

04) சிறுவன் ஒருவன் பாடசாலை செல்வதற்குத் தனது வீட்டிலிருந்து வடக்குத் திசை நோக்கிப் புறப்பட்டான். செல்லும் வழியில் அவன் தனக்கு மேற்குத் திசையில் இருந்த தேவாலயத்தைத் தாண்டிச் சென்றான். சிறுவன் தேவாலயத்தைத் தாண்டும் போது தேவாலயம் காணப்பட்டது சிறுவனுக்கு எப்பக்கத்தில்?
1. வலது பக்கத்தில்   2. இடது பக்கத்தில்   3. பின்பக்கத்தில்


05) பத்திரிகை நிறுவனம் ஒன்றில் நடைபெறும் செயற்பாடுகளானது கீழே தரப்பட்டுள்ளது. அச்செயற்பாடுகள் ஒரு ஒழுங்கு முறையில் தரப்படவில்லை. அவற்றை ஒழுங்கு முறைப்படுத்தினால் வரும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| a | அச்சிடுதல் |
| b | ஒழுங்கமைத்தல் |
| e | சரிபார்த்தல் |
| c | செய்திகளைச் சேகரித்தல் |
| d | விநியோகித்தல் |


1. c, b, e, a, d   2. b, a, d, e, c   3. c, a, b, d, e

**தரப்பட்டுள்ள உருவத்தினை அம்புக்குறி காட்டப்பட்ட திசையில் மேலிருந்து பார்க்கும்போது எவ்வாறு தோற்றமளிக்கும் என்பதைத் தெரிவு செய்க.**

06)




07) உருவில் நிழற்றப்பட்ட பகுதி வெட்டி நீக்கப்பட்டுள்ளது. அதனை A - A, B -B கோடுகள் வழியே இரு தடவை மடித்தால் கிடைக்கும் உருவைத் தெரிந்து கீறிடுக.









**தரப்பட்ட எண் கோலங்களுக்கான தொடர்புகளை விளங்கிக் கொண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

08)




1) 54 2) 72 3) 81


09)




1) 15
2) 20
3) 63

**இப்படங்களின் சரியான ஒழுங்கு வரிசையைக் காட்டுகின்ற விடையின் கீழ்க் கோடிடுக.**

10)



(A) (B) (C) (D)

1) B C D A
2) C A B D
3) B C A D
4) A D C B

**இப்பாடலைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

எழுத்தினை அறிந்து ஏடுகள் படித்து
விழுமிய அறிவும் திறன்களும் மெல்லப்
பழுதிலாது பாடசாலை நிழலில் படித்து
வாழும் இளமொட்டுக்களே நாளைய
நம் நாட்டின் செல்வங்களே.

இப்பாடலில் தடித்த கறுப்பு நிறத்தினால் காட்டப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றினதும் கருத்தைத் தரும் சொல்லைத் தெரிவு செய்து அதற்கு உரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

11) ஏடுகள் படித்தல் 1. கற்றல் 2. எழுதுதல் 3. எண்ணுதல் (.........................)

12) திறன் 1. சக்தி 2. ஆற்றல் 3. வலிமை (.........................)

13) இளமொட்டுக்கள் 1. அரும்புகள் 2. சிறுபிள்ளைகள் 3. சிறுநண்பர்கள் (.........................)

14) ஸ்ரீ குமரனதும் சாந்தனதும் வயதுகளின் கூட்டுத்தொகை 45 வருடங்களாகும். ஸ்ரீகுமரனின் வயது சாந்தனின் வயதிலும் 4 மடங்காயின் சாந்தனின் வயது எத்தனை வருடங்களாகும்?
1. 10 வருடங்கள் 2. 9 வருடங்கள் 3. 8 வருடங்கள்

15) நான் இன்றி அணுவும் அசையாது. நான் தான் உலகின் அதிபதி. என்னைச் சுற்றி எனது ஆதரவாளர்கள் வலம் வருகின்றனர். நான் யார்?
1. நாட்டின் ஜனாதிபதி 2. வீரக்கடவுள் 3. சூரியன்



16) இக்கூட்டினுள் உள்ள எண்களைப் பற்றிய சரியான கூற்று,


15, 18,
23

1. ஒவ்வொரு எண்ணும் மூன்றால் வகுபடும்
2. இதில் ஒரு எண் மட்டும் 2 ஆலும், 3 ஆலும் வகுபடும்
3. இங்குள்ள சகல எண்களினதும் கூட்டுத்தொகை 3 ஆல் வகுபடும்

17) ஒரு நாள் ஜெசிந்தா தனது நண்பியிடம் ஒரு படத்தைக் காட்டி இதில் இருப்பவர் எனது அண்ணனின் அம்மாவின் தகப்பன் என்று கூறினாள். அப்படத்தில் இருப்பவர் ஜெசிந்தாவின்,
1. மாமா 2. தாத்தா 3. அப்பா

18) குடும்பமொன்றின் இளைய மகனான குமாரின் படிப்பிற்காக அவரின் தந்தை அதிகளவு பணத்தைச் செலவழித்தாலும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. இதைக்கூறும் சரியான கூற்று,
1. குதிரைக்குக் கொம்பு கிடைத்ததுபோல 2. ஆழமறியாது காலை விடாதே
3. விழலுக்கு இறைத்த நீர்போல

**தரப்பட்டுள்ள உருவின் உதவியுடன் 19, 20, 21 ஆம் வினாக்களுக்கு விடைதருக.**



19) தரப்பட்டுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள கோடுகள் வழியே வெட்டினால் எத்தனை சமதுண்டுகள் கிடைக்கும்?
1. 9 2. 27 3. 18

20) தரப்பட்டுள்ள உருவின் நிழற்றப்பட்டுள்ள சதுரத்தினூடாக சதுரத்துவாரம் ஒன்றை ஏற்படுத்தினால் மிகுதியாக எத்தனை சிறிய சதுரமுகிகள் உள்ளன?
1. 26 2. 8 3. 24

21) தரப்பட்டுள்ள உருவின் வெளிப்புறத்தைப் பூரணமாக நிழற்றியபின் காட்டப்பட்டுள்ள கோடுகள் வழியே வெட்டினால் ஒரு பக்கத்திலாவது நிழற்றப்பட்டிருக்காத எத்தனை சதுரமுகித் துண்டுகள் கிடைக்கும்?
1. 3 2. 1 3. 9

**தரப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் நான்காவதாக நடைபெறும் நிகழ்ச்சிக்குரிய எண்ணைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

22) A - தூரத்தில் பேருந்து வருகின்றது B - அவன் தெருவிற்கு வருகிறான்
C - பற்றுச்சீட்டொன்றைப் பணம் கொடுத்து வாங்குகின்றான் D - பேருந்தினுள் ஏறுகின்றான்
E - அவனருகில் பேருந்து நிற்கின்றது
1. A 2. D 3. E

23) A - விவசாயி மகிழ்ச்சியடைந்தான் B - விவசாயி கஸ்ரப்பட்டு வயலை உழுதான்
C - நெற்கதிர்களினால் வயல் நிறைந்திருந்தது D - நாற்று நட்டான்
E - பாதுகாப்புடன் வயலைக் கவனித்தான்
1. A 2. C 3. B

24) தோட்டமொன்றில் உள்ள பலா மரங்களின் எண்ணிக்கையைப்போல் இருமடங்கு மா மரங்கள் உள்ளன. மாமரங்களைப் போல் மும்மடங்கு தென்னை மரங்களும், தென்னை மரங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 10 அதிகமாக பாக்கு மரங்களும் உள்ளன. தோட்டத்தில் 34 பாக்கு மரங்கள் இருக்குமாயின் தோட்டத்திலிருந்த பலா மரங்கள் எத்தனை?
1. 24 2. 8 3. 4

25) ஒரே இடத்தில் இரண்டு மோட்டார் வண்டிகள் ஒன்றுக்கொன்று எதிர்த்திசையில் புறப்பட்டுச் சென்றன. ஒரு வண்டி 250 மீற்றர் தூரம் சென்று மீண்டும் தான் சென்ற வழியே 50 மீற்றர் திரும்பி வந்து நிறுத்தியது. மற்றைய வண்டி 200 மீற்றர் தூரம் சென்று நின்றது. தற்போது இரண்டு வண்டிகளுக்கும் இடையியே உள்ள தூரம் எவ்வளவு?
1. 400 மீற்றர் 2. 250 மீற்றர் 3. 450 மீற்றர்

26) நீர்க்குழாய் ஒன்று இரண்டு நிமிடத்திற்கு 12 லீற்றர் நீரை வெளியேற்றும். இன்னுமொரு குழாய் மூன்று நிமிடத்திற்கு 15 லீற்றர் நீரை வெளியேற்றும். இரண்டு குழாய்களும் 30 நிமிடத்தில் மொத்தமாக எத்தனை லீற்றர் நீரை வெளியேற்றும்?
1. 180 லீற்றர் 2. 150 லீற்றர் 3. 330 லீற்றர்

# உசுப்பி ஏற்றிவிடும் அரசியலையே தொடர்கிறது கூட்டமைப்பு!

மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள அமெரிக்க தீர்மானம் எத்தகைய ஒன்றாக இருக்கலாம், அது இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் மீது எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தலாம் என்றவாறான விவாதங்களில் அனைவரும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் போது, அவ்வாறான விவாதங்கள் அனைத்தையும் ஓரம்கட்டும் வகையில் த.தே.கூட்டமைப்பின் உள் முரண்பாடுகள் அம்பலமாகியுள்ளன. இதுவரைக்கும் கூட்டமைப்பின் உள்வட்டத்திற்கும், ஊடகத் தரப்பினருக்கும் மட்டுமே தெரிந்திருந்த உட்சிக்கல்கள் தற்போது மக்கள் மத்தியில் பேசு பொருளாகியிருக்கின்றன.

ஜெனிவா கூட்டத்தொடரில் த.தே. கூட்டமைப்பும் பங்கு கொள்ளும் என்றவாறான அபிப்பிராயங்களை ஏலவே கூட்டமைப்பு வெளிப்படுத்தியிருந்த நிலையில், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஜெனிவா கூட்டத் தொடரில் தாம் பங்குகொள்ளப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்.


இதனைத் தொடர்ந்து பி.பி.சி தமிழோசையில் கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அது 'கூட்டமைப்பின் முடிவல்ல, கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 'ஒரிருவரின்' முடிவு என்று தெரிவித்திருந்தார். கூடவே அவர் அந்த ஒரிருவர், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் என்றும் தெரியப் படுத்தியிருந்தார்.

இதனை மறுத்து அதே பி.பி.சி தமிழோசையில் கருத்துத் தெரிவித்திருந்த சுமந்திரன் பல்வேறு நாடுகளின் ராஜதந்திரிகளின் ஆலோசனையின் பேரிலேயே தாம் அத்தகையதொரு முடிவுக்கு வந்ததாகவும் அத்துடன் இது தமது தனிப்பட்ட முடிவு அல்லவென்றும் கூறியிருக்கிறார். இதுவே தற்போதைய சிக்கல்களின் அடிப்படையாக இருக்கிறது.

விடுதலைப்புலிகளின் அழிவைத் தொடர்ந்து தமிழ் மக்களின் பிரதான தலைமையாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட த.தே.கூட்டமைப்பு, ஒரு பொறுப்பான மக்கள் தலைமைக்கான எந்தவொரு அரசியல் முதிர்ச்சியையும் இதுவரை காண்பித்திருக்கவில்லை. ஆகக் குறைந்தது அதற்கான முயற்சிகளைக் கூட மேற்கொண்டிருக்கவில்லை. இதன் தொடர்ச்சிதான் இதுவரை உள்ளுக்குள் மட்டுமே குடைந்து கொண்டிருந்த கூட்டமைப்பின் அரசியல் நாற்றம் தற்போது மக்கள் மத்தியில் பரவியிருக்கிறது.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் டெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நாட்டில் இல்லாத நிலையிலேயே இரா.சம்பந்தரின் மேற்படி முடிவு வெளியாகியிருநதது.

சம்பந்தனின் குறித்த நடவடிக்கை



தங்களுக்குரிய இடத்தை மறுத்துள்ளது என்பதுடன், இது திட்டமிடப்பட்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்னும் அடிப்படையிலேயே சுரேசின் தர்க்கம் அமைந்திருக்கிறது.

முரண்பாட்டை வெளிப்படுத்தியுள்ள சுரேஸ் பிரேமச்சந்திரன், த.தே.கூட்டமைப்பு ஜெனிவா செல்லாமல் விடுவதால் ஏற்படப் போகும் பாதகங்கள் பற்றி எதனையும் கூறவில்லை.

கூட்டமைப்பு இதில் பங்குகொள்வதால் எத்தகைய பாதிப்புக்கள் ஏற்பட முடியும்? இதனை விளங்கிக் கொள்வதற்கு, தற்போது அதிகரித்துவரும் குறிப்பாக அமெரிக்கா தலைமையில் அதிகரித் திருக்கும் மேற்கின் தலையீடுகளை முதலில் நாம் விளங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

நமது சில அரசியல் பத்தியாளர்களும் சில புலம்பெயர் ஊடகங்களும் குறிப்பிட்டுவருவது போன்று, தற்போதைய அமெரிக்க நிலைப்பாட்டிற்கும் புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. புலம் பெயர் தமிழர்கள் வீதியில் நின்றாலும் அல்லது நிற்காது போனாலும் அமெரிக்கா தனது நகர்வுகளை மேற்கொண்டே ஆகும். ஏனெனில் அடிப்படையில் இது அமெரிக்காவின் ஆசியா நோக்கிய மூலோபாய நகர்விற்கும், மகிந்த அரசு சமீபகாலமாக கடைப் பிடித்துவரும் சில மேற்கு விரோத வெளிவிவகார உறவுகளுக்கும் இடையிலான மோதலாகும்.

ஆனால் இதற்கு அமெரிககா கையில் எடுத் திருக்கும் விடயம் எங்களுடைய பிரச்சினையாகும் இதன் பொருட்டு அமெரிக்கா புலம்பெயர் தமிழரையும் கையாளக்கூடும். இந்த இடத்தில்தான் ஈழத் தமிழரும் அமெரிக்காவும் ஒரு புள்ளியில் சந்திக்கின்றனர். ஆனால் இது ஒரு மிகப் பெரிய சதுரங்கப்பலகை விளையாட்டு. இதில் தேவையற்ற வகையில் நாம் தலையிடாமல் இருப்பதுதான் இன்றைய சூழலில் புத்தி சாதுர்யமானது.

**யதீந்திரா கட்டுரையிலிருந்து**

தற்போது மனித உரிமைகள் பேரவையில் அங்கத்துவம் பெற்றுள்ள 47 நாடுகளின் தீர்மானத்திலேயே அமெரிக்கத் தீர்மானத்தின் வெற்றி தோல்வி தங்கியுள்ளது.

அமெரிக்காவுடன் சில நாடுகள் கைகோர்த்தால், இலங்கையை சர்வதேச அரங்கில் காப்பாற்றும் பொறுப்பை சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் முன்னெடுக்கும். குறிப்பாக ஈரானுடன் தொடரபிலிருக்கும் அமெரிக்காவிற்கு எதிரான முஸலிம் நாடுகளும் இலங்கையை ஆத ரிக்கும். இதில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று. எனினும் இந்தியா இதுவரை எந்தவொரு நிலைப்பாட்டையும் தெரிவித்திருக்கவில்லை.

ஒருவேளை இந்தியா இலங்கையை காப்பாற்ற முற்படுமாயின் இலஙகை வெற்றிபெறுவது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கும். ஏனெனில் ஆசிய நாடுகள் சிலவற்றின் முடிவை மாற்றக் கூடிய வல்லமை இந்தியாவிற்குண்டு.

எனவே இவ்வாறான விடயங் களை தொகுத்துப் பார்ப்போமா யின் நாம் மேலும ஒரு உண்மையை விளங்கிகொள்ள முடியும் - ஜெனிவாவில் இலங்கையை மையப்படுத்தி பலம்பொருந்திய நாடுகள் ஒரு ராஜதந்திர மோத லில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன என்பதுதான் அந்த உண்மை. அந்த ராஜதந்திர மோதலின் விளைவு தான் இலங்கையின் வெற்றி அல்லது தோல்வி ஆகும். இதில் கூட்டமைப்பு செல்வாக்குச் செலுத்த முடியும் என்று எண்ணுவது உண்மையில் ஒரு அரசியல் அறியாமையாகும் அல்லது அறிந்தும் உண்மை சொல்ல விரும்பாமையாகும்.

ஆனால் இதில் கூட்டமைப்பு சந்திக்கவுள்ள குறிப்பாக இரா.சம்பந்தன் சந்திக்கவுளள பிறிதொரு சிக்கலும் உண்டு. சம்பந்தனின் முடிவு வெளியாகியதைத் தொடரந்து, சாதாரண மக்கள் மத்தியில் கூட்டமைப்பு குறித்தும் குறிப்பாக சமபந்தன் குறித்தும் விமர்சனங்கள் எழுந துள்ளன. வரலாற்றின் முக்கியமான தொரு தருணத்தில் சம்பந்தன் தவறான முடிவை எடுத்திருப்பதாகவே பலரும் அபிப்பிராயப்படுகின்றனர். தவிர, சம்பந்தனின் முடிவை அரசாங்கமும் வரவேற்றிருந்தது.

ஒருவேளை ஜெனிவாவில் இலங்கை அரசு வெற்றிபெறுமாக இருந்தால் சம்பநதர மக்களை எதிர்கொள்ளுவதில் நெருககடிகளைச் சந்திக்க நேரிடலாம். மக்கள் சமபந்தனுக்கு எதிராக திரும்பவும் வாய்ப்புண்டு. இது ஆரம்பத்திலிருந்தே கூட்டமைப்பு கடைப்பிடித்து வரும் ஒழுங்கற்ற அரசியலின் விளைவே அன்றி வேறில்லை.

புலிகளின் அழிவுக்குப் பின்னர் தலைமைத்துவ நாற்காலிக்கு வந்த கூட்டமைப்பு, புதிய சூழலுக்கு ஏற்றவாறான முடிவை மக்களுக்கு பகிரங்கப்படுத்தாமல், உசுப்பி ஏற்றிவிடும் பழைய அரசியலையே தொடர முற்பட்டது. இதன் விளைவே இன்று சூழ்நிலைக்கு ஏற்றவாறு சம்பந்தன ஒரு முடிவை அறிவிக்கும் போதும், மக்கள் ஏலவே பழக்கப் படுத்தப்பட்ட அரசியலுக்கு ஊடாக சம்பநதனை பார்க்கின்றனர். இது மக்க ளின் பிரச்சினையல்ல, கூட்டமைப்பின் பிரச்சினை.

எனவே இரா.சம்பந்தன் கூட்டமைப்புக்குள் நிலவும், இத்தகைய அரசியல் ஒழுக்கமின்மையை திருத்திக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகக் கூட மேற்படி முரண்பாட்டை பயன்படுத்திக் கொள்ள முடியும். இப்படித்தான் தொடர்ந்தும் கூட்டமைப்பு இருக்குமாயின், மக்களாகப் பார்த்து திருந்திக் கொண்டால்தான் உண்டு.

## மேடைக்குத் திரும்புகிறார் பத்மப்பிரியா!




நாடக மேடையிலிருந்து சேரனின் 'தவமாய் தவமிருந்து' மூலம் தமிழ்த்திரைக்கு வந்தவர் நடிகை பத்மப்பிரியா. நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் மேடைக்குத் திரும்புகிறேன். நல்ல நாடகங்களில் நடிக்கப் போகிறேன் என்று கூறியுள்ளார்.

நாடகத்துறையிலிருந்துதான் சினிமாவுக்கு வந்தேன். இங்கு வந்த பிறகு நாடகத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இப்போது, என்னைப்போல் ஒரே எண்ணம் கொண்ட, மலையாள நடிகை ஆன் அகஸ்டின், இயக்குனர் வி.கே.பிரகாஷ், எழுத்தாளர் ஜெயப்பிரகாஷ் குலூருடன் பேசிக்கொண்டிருந்தபோது நாடக எண்ணம் மீண்டும் துளிர்த்தது. சிறந்த நாடகங் களை தயாரித்து அதிகமான ரசிகர்களிடையே கொண்டு செல்ல முடிவு செய் திருக்கிறோம். அதன்படி, முதலில் ரஷ்ய எழுத்தாளர் அன்டன் செக்கோவ் மற்றும் ஜெயப்பிரகாஷ் குலூர் படைப்புகளை நாடகமாக்கியுள்ளோம்.

நாடகத்துக்கு வந்து விட்டதால் சினிமா அவ்வளவுதானா என்று கேட்காதீர்கள். தமிழில் 'தங்கமீன்கள்' படத்தில் நடிக்கிறேன். மலையாளத்தில் மூன்று படங்களில் நடித்துவருகிறேன். நல்ல படங்களில் நடிக்க வேண்டும் என்ற பேராசை கொண்டவள். அதனால் சிறந்த கதைகளைத் தேடித் தேடி மட்டும் நடிக்கிறேன் என்கிறார் பத்மப்பிரியா.

## தீட்டும் ரோபோ!



விளையாட்டுச் சாதனங்களில் தொடங்கிய ரோபோக்கள் படிப்படியாக ஆதிக்கத்தை வளர்த்து கார் தொழிற்சாலைகள், கனரக சாதனங்கள் உற்பத்தி வகையில் புகுந்தன. பின்னர் மருத்துவமனைகளில் சில குறிப்பிட்ட சத்திரசிகிச்சைகளையும் வெற்றிகரமாக செய்து சாதனை நிகழ்த்தின. தற்போது ஜெர்மனி நாட்டில் ஒரு நிறுவனத்தினர் ஓவியம் தீட்டும் ரோபோவை கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ரோபோ முன்பு அமர்ந்தால் போதும் 10 நிமிடங்களில் நமது உருவத்தை மிகவும் தத்ரூபமாக வரைந்து விடுமாம். அதன் செயற்பாடு குறித்து இதனை வடிவமைத்த விஞ்ஞானி மார்டினா ரிசெர் கூறுகையில், இதில் உள்ள கமெரா மனித உருவத்தைப் படம் எடுத்து, நுட்பமான மென்பொருள் உதவியுடன் ரோபோ கரங்களுக்கு அது கட்டளையிடப்பட்டு உருவம் வரையப்படுகிறது என்றார். விரைவில் இந்த ரோபோ சந்தைகளில் அறிமுகமாகவிருக்கிறது.

## எழுதும் கலை -4

1. எழுத எழுத எழுத்துக்கே ஒரு சீற்றம் உண்டு. இரை தேடி அலைகிறது.
3. எந்த உத்தியை எழுத்தாளன் கையாண்டாலும் சரி, அதோடு இணைந்து, அதே சமயம் அதைத் தன்னோடு பிணைக்கும் கட்டுப்பாடு, பொறுப்பு, உழைப்பு, discipline அவன் பாஷைக்கு அத்யாவசியம.
4. கதை எழுதுவது பெரிய விஷயமல்ல. அந்த அழகிய சிற்பத்தை இழைத்து இழைத்து, தட்டித்தட்டி கண்மூடாமல் நகாசு வேலை செய்து சிற்பத்தின் கண் திறந்து உக்ரத்தை வரவழைக்க வேண்டும்.
5. சில சமயங்களில் மனதில் ஒரு எண்ணம் எழுந்ததும் சமயமும் சந்தர்ப்பமும் அற்று அதையொட்டி, அதே மனத்தில் வாக்குத் தொடர்கள் எழுகின்றன. எழுந்ததும் அவைகளே எண்ணங்களாகவும் மாறி தாமே தம்மைத் தனித்தனித் தொடரபுகளுடன் பெருக்கிக்கொண்டு விடுகின்றன.
6. கதையம்சம் என்று தனியாக எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எந்தக் காட்சியில், எந்த ஓசையில், ஒரு அற்புத அம்சத்தில் கண், செவி, மனம் இதயம் என்று காண்கிறதோ, அங்கேயே கதை பிறந்து விட்டது.
7. நெருப்பென்றால் வாய் சுடணும். அப்படி வார்த்தையைச் சுண்டக்காய்ச்சி எழுதணும்.



8. நிறையப் படிக்கணும். தமிழ் மட்டுமல்ல, தெரிஞ்ச மொழி எல்லாத்துலேயும் நிறைய படிச்ச பிறகு எழுத ஆரம்பிக்கணும்.
9. யாருமே எழுத்தாளனாய்த்தான் இருக்க வேண்டும் என்றில்லை. அவரவர் வழியில் அழகைப் பேணுபவர்தான். ஆனால் அழ்கை எங்கேயும் கண்டு கொள்ள மனம் பழகவேண்டும். மாலையின் செவ்வானம் அவள் ஜ்வாலா முகத்தை நினைவூட்ட வேண்டும். வாழைமரத்தில் ஆடும் வாழை இலைப் பச்சையில் அவளுடைய தட்டாமாலையில் சுற்றும் பச்சைப் பாவாடை மனதில் தோன்ற வேணடும். அப்போதுதான் தரிசனம் நிகழும். எழுத்தாளனுக்கு, அவன் எழுத்து காட்டும் முகங்கள் தான் தரிசனங்கள். To cmprehend in the known factor, the unknown - that is mytsic experience.

லா.ச.ராமாமிருதம்



# பயங்கரவாத தடுப்பு மையம் குறித்து முதல்வர்களின் மாநாடு தேவை

(சென்னை)

மத்திய அரசு அமைக்க உத்தேசித்துள்ள தேசிய பயங்கரவாத தடுப்பு மையம் குறித்து கலந்தாலோசிக்க மாநில முதல்வர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங்கிடம் முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து பிரதமருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

மாநில அரசின் பங்களிப்பு இல்லாமல் பயங்கரவாத தடுப்பு மையத்தை அமைப்பது சாத்தியமில்லாதது.

சிறப்பான உளவுப் பிரிவு, எப்போதும் உஷாராக இருப்பது, நவீன கருவிகளை கையாள உரிய பயிற்சி ஆகியவை பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் முக்கியமாகும்.


அதைவிடுத்து, தேசிய பயங்கரவாத தடுப்பு மையம் அமைக்க மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் மாநில அரசுகளின் அதிகாரத்தைப் பறிக்கும் வகையில் அமைந்துள்ளது. பயங்கரவாதிகளைக் கைது செய்வது அவர்களிடம் ஆயுதங்களைப் பறிமுதல் செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய இணைச் செயலர், மாநில அரசின் உள்துறைச் செயலாளருக்கு அதிகாரம் உள்ளது.

ஆனால் உள்துறை அமைச்சகம் பிறப்பித்துள்ள சுற்றறிக்கை மூலம் அந்த அதிகாரம் மாற்றப்பட்டு பயங்கரவாத தடுப்பு மையத்திலுள்ள உளவுப் பிரிவு அதிகாரிகளுக்குச் சென்றுவிடும். இது மாநில அரசின் அதிகாரத்தை பறிப்பதாகும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்பது தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. தேசிய பயங்கரவாத தடுப்பு மையம் அமைப்பது தொடர்பாக பல்வேறு விஷயங்கள் விவாதிக்கப்பட வேண்டியுள்ளது. இது தொடர்பாக பல்வேறு சந்தேகங்களை பல மாநில முதல்வர்கள் ஏற்கெனவே உங்களிடம் நேரடியாக தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், தேசிய பயங்கரவாத தடுப்பு மையம் அமைப்பதில் மத்திய, மாநில அரசுகளின் பங்கு வரையறைக்கும் விளக்க அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதன் பின்னர் இதுகுறித்து ஆலோசித்து முடிவு எடுக்க மாநில முதல்வர்களின் கூட்டத்தைக் கூட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

# இலங்கைப் பெண்ணை படகில் ஏற்றிவந்த ஐந்து தமிழக மீனவர்கள் சிறையில்



(இராமேஸ்வரம்)

கச்சத்தீவு அந்தோனியார் தேவாலய விழாவிற்குச் செனறு திரும்பியபோது படகில் இலங்கைப் பெண்ணை ஏற்றி வந்த படகு ஊழியர்களை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இவர்களை விடுதலை செய்யக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுமுன்தினம் கடலுக்குச் செல்லாமல் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர். இராமேஸ்வரத்திலிருந்து கச்சத்தீவு அந்தோனியார் தேவாலய விழாவுக்கு தேவதாஸ் என்பவரின் படகில் சென்ற பக்தர்கள் இராமேஸ்வரம் திரும்பிய போது அவர்களுடன் இலங்கை திருகோணமலையைச் சேர்ந்த உஷா மற்றும் நான்கு வயது மகள் நீரா ஆகியோரை படகில் ஏற்றி வந்தனர்.

இவர்கள் இருவர் உட்பட படகு ஊழியர்கள் பாண்டி, குமரேசன், ஆயுதபூஜை, முனியசாமி, படகோட்டி கண்ணன் ஆகியோரை கைது செய்த மரைன் பொலிஸார் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். நீதவான் குமரேசன் உத்தரவுப்படி, உஷா, நீரா, திருச்சி சிறையிலும், மீதி ஐந்து பேர் மதுரைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்யக்கோரி மீனவர்கள் நேற்றுமுன்தினம் கடலுக்கு செல்லவில்லை. மீன்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டு, ஐந்து மீனவர்களை விடுவிக்கும் வரை கடலுக்கு செல்லப்போவதில்லை எனத் தெரிவித்தனர்.




# பாகிஸ்தான் எல்லையில் பிரம்மோஸ் ஏவுகணைப் பிரிவு

(புதுடில்லி)

ஒலியை விட மூன்று மடங்கு வேகத்தில் 290 கி.மீ. தூரம் வரை சென்று இலக்கை தாக்கும் பிரம்மோஸ் ஏவுகணையை இந்தியா நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக சோதித்தது.




அது மட்டமல்ல, இந்த ஏவுகணைகளை உள்ளடக்கிய புதிய படைப்பிரிவை பாகிஸதானை ஒட்டிய வடக்கு இராணுவ மண்டலத்திலும் இந்தியா சேர்த்துளளது.

பிரம்மோஸ் ஏவுகணைப் பிரிவு முதலில் சீன எல்லையை ஒட்டிய கிழக்கு இராணுவ மண்டலத்தில் தான் சேர்க்கப்பட்டது. இந் நிலையில் இப்போது இன்னொரு பிரம்மோஸ் ஏவுகணைப் பிரிவு உருவாக்கப்பட்டு பாகிஸ்தான் எல்லையை கண்காணிக்கும் இராணுவத்தின் மேற்கு மண்டல பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த இரு பிரம்மோஸ் ஏவுகணைப்பிரிவுகளும் எந்த இராணுவ மையத்தை தலைமையிடமாகக் கொண்டு செயறபடுகின்றன என்பது இரகசியமாகும்.

இதன்மூலம் இந்தியா நினைத்தால் எந்த நேரத்திலும் அதிவேகத்தில் பிரம்மோஸ் ஏவுகணைகளை நமது அண்டை நாடுகளை நோக்கி செலுத்த முடியும்.இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து உருவாக்கிய இந்த பிரம்மோஸ் ஏவுகணையால் 290 கி.மீற்றரையும் தாண்டி தாக்குதல் நடத்த முடியும்.

ஆனால், சர்வதேச ஏவுகணை கட்டுப்பாட்டு சட்டங்களுக்கு உட்பட்டு அதன் தாக்குதல் தூரம் கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பிரம்மபுத்திரா நதியையும் ரஷ்யாவின் மாஸ்க்வா நதியையும் இணைத்துத் தான் பிரம்மோஸ் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# ஜூலையுடன் முடிவடையும் ஜனாதிபதி பிரதீபாவின் பதவி

(புதுடில்லி)

ஜனாதிபதியாக உள்ள பிரதீபா பாட்டீல் மற்றும் துணை ஜனாதிபதி அன்சாரி ஆகியோரின் பதவிக்காலம் ஜூலை 25 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

எனவே, 5 மாநில சட்டசபை தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடிக்க தேர்தல் திணைக்களம் ஜனாதிபதி, துணை ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாட்டில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையின் ஒப்புதலை பெற்ற பிறகு, தேர்தல் நடவடிக்கைகளை தொடங்க தேர்தல் திணைக்களம் முடிவு செய்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு ஜூன் 16 ஆம் திகதி வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிருக்கு மானால், 19 ஆம் திகதி வாக்குப்பதிவு நடத்தப்படும். வேட்பு மனுவை வாபஸ் பெற ஜூலை 4 ஆம் திகதி கடைசி நாளாகும்.



19 ஆம் திகதி பதிவாகும் வாக்குகள் 21 ஆம் திகதி எண்ணப்படும். ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு, துணை ஜனாதிபதி தேர்தலுக்கான நடவடிக்கைகள் தொடங்கும். ஜனாதிபதி, துணை ஜனாதிபதித் தேர்தலோடு, தலைமைத் தேர்தல் அதிகாரி குரோஷியும் ஓய்வு பெறுகிறார்.

# இலங்கைத் தமிழருக்காக நடராஜன் உண்ணாவிரதம்



(திருச்சி)

இலங்கையில் தமிழர்கள் அனுபவிக்கும் கொடுமைகளைக் கண்டித்து சிறையில் இருந்தே உண்ணாவிரதம் இருக்க உள்ளதாக சசிகலாவின் கணவர் நடராஜன் கூறியுள்ளார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழி சசிகலாவின் கணவர் நடராஜன் பணமோசடி செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு தற்போது திருச்சி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த கொண்டு வரப்பட்ட அவர், செயதியாளர்களிடம் கூறுகையில் இவ்வாறு தெரிவிததுள்ளார்.

# தொலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்பு இராணுவத் தளபதி மீது விசாரணை



(புதுடில்லி)

மத்திய இராணுவ அமைச்சகத்தின் தொலைபேசி உரையாடல்களை இடைமறித்து ஒட்டுக்கேட்டதாக இராணுவத் தலைமை தளபதி வி.கே.சிங் மீது எழுந்த புகாரையடுத்து அவரிடம் விரிவான விசாரணை நடத்த இராணுவ அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவின் இராணுவத் தலைமைத் தளபதியாக உள்ள வி.கே.சிங், வயது விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்ற உத்தரவினைத் தொடர்ந்து விரைவில் ஓய்வு பெறவுள்ளார்.

இந்நிலையில் மத்திய இராணுவ அமைச்சகத்தின் தொலைபேசி உரையாடல்களை இடைமறித்து ஒட்டுக்கேட்டதாக அவர் மீது புகார் ஒன்று எழுந்துள்ளது.

இது தொடர்பாக கடந்த வாரம் வி.கே.சிங் மீது எழுந்த குற்றச்சாட்டுகள் குறித்து இராணுவ அமைச்சகத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

அதில், தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி புதுடில்லி இராணுவ தலைமையகத்தில் இருந்த படி, இராணுவ அமைச்சகத்தின் முக்கிய தொலைபேசி உரையாடல்களை இடைமறித்து ஒட்டுக்கேட்டதாக கூறப்பட்டுள்ளது.

எனவே, வி.கே.சிங்கிடம் இது குறித்து விரிவான விசாரணை நடத்த இராணுவ அமைச்சகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. இதேவேளை முக்கிய அதிகாரிகளுக்கு இடையே நடந்த தொலைபேசி உரையாடல்களை, நான் ஒட்டுக் கேட்டதாக வெளியான தகவல் பொய்யானது என இராணுவத் தளபதி வி. கே.சிங் கூறியுள்ளார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..............................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## தவக்காலச் சிந்தனை



## வழிநடத்தும்...

இறைவா என்னை மன்னியும். நான் உமக்கு எதிராகப் பாவம் செய் துள்ளேன். ஆம் நாம் ஒவ்வொரு முறையும் பாவத்தில் விழுகின்றோம். செய்யக்கூடாத தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இவற்றுக்கெல்லாம் நாம் எத்தனை தடவைகள் பாவ மன்னிப்புப் பெற்று, மனம் திருந்தியவர்களாக வாழ முற்படுகின்றோம்.

மன மாற்றம் என்பது பாவம் என்னும் கொடிய அரக்கின் கட்டுகளில் இருந்து விடுபட்டு தூயவர்களாக வாழுவதாகும். ஆனால் நாம செய்கின்ற தவறுகளையே திரும்பித் திரும்பிச் செய்து கொண்டிருக்கிறோம். நாம் செய்யும் பாவங்கள் ஆண்ட வர் இயேசுவின் உடம்பில் பட்ட காயங்களிலும் மேலாக அவரையே மேலும் மேலும் வருத்துகின்றோம். கிறிஸ்து மீண்டும் பிறந்து சிலுவை சுமந்து பாடுபட வேண்டும் என்பது நமது விருப்பமா? ஒரு முறை மரித்த அவர் தமது சிலுவையினால் உலகை முழுமையாக இரட்சித்தார். ஆனால் நாம் உலகியல் ஆசைகளால் உந்தப்பட்டு பூரண பாவ வாழ்கையில் நாளாந்தம் எமது வாழ்வை செலவளிக்கின்றோம். இந்த மனமாற்றத்தின் காலத்தில் எமது வாழ்வை முழுமையாக மாற்றி, ஆண்டவருக்கு உகந்த வாழ்வு வாழ்ந்து எமது குடும்பம், உறவினர்களுடன் நாம் வாழும் காலம் வரைக்கும் எமது வாழ்வு தூய்மையானதாக இருக்க இறைவனிடத்தில் மன்னிபப்புப் பெற்று புதுவாழ்வு வாழ திடசங்கர்ப்பம் கொள்வோம்.

# பொலிஸ் நிலையத்தின் மீது ஈராக்கில் அதிரடித் தாக்குதல்



## 27 பொலிஸார் உயிரிழப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் பொலிஸ் நிலையம் பாரிய தாக்குதலுக்கு உள்ளானதாக பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் மேற்கு பிராந்தியத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தின் மீது ஒரேநேரத்தில் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் குறைந்தது 27 பொலிஸ் அதிகாரிகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை இரண்டு சிரேஷ்ட உயர்தர அதிகாரிகளைக் கடத்திச் சென்ற ஆயுததாரிகள், பின்னர் அவர்களையும் சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ உடைதரித்த ஆயுததாரிகள் பொலிஸ் நிலையத்தாக்குதலை மேற்கொள்வதற்கு முன்னர் பல பொலிஸ்சோதனைச் சாவடிகளையும் தாக்கியுள்ளனர்.

இந்தத்தாக்குதல்களுக்கான உரிமை இதுவரையில் கோரப்படாத போதிலும், இவை அல் கைதா தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்பட்டதாக ஈராக்கிய பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான சில பொலிஸ் சாவடிகளில் அல்கைதா கொடிகள் ஏற்றப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த டிசம்பர் மாதம் ஈராக்கில் இருந்து அமெரிக்கத் துருப்பினர் மீள அழைக்கப்பட்டதன் பின்னர், அங்கு அல் கைதா தீவிரவாதிகளின் தாக்குதல் சம்பவங்கள் பாரிய அளவில் அதிகரித்து வருவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கடந்த மாதத்தில் மட்டும் இடம்பெற்ற பல தாக்குதல்களில் குறைந்தது 55 பேர் கொல்லப்பட்டதுடன், நூற்றுக் கணக்கானவர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேசத்திற்கு உகந்ததாக ஈரான் அணுத்திட்டம் இல்லை

## ஐ.ஏ.இ.ஏ.தலைவர் கவலை

ஈரானின் அணுத்திட்டம் சர்வதேச சமூகத்திற்கு உகந்தது அல்ல என்று ஐ.நா.வின் சர்வதேச அணு சக்தி முகவரமைப்பின் (ஐ.ஏ.இ.ஏ) தலைவர் கவலை தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரித்து வருகிறது என அமெரிக்கா, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருவதுடன் அந்த நாட்டின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன.

இது தொடர்பாக சர்வதேச அணு சக்தி முகவரமைப்பின் குழுவினர் ஈரான் சென்று ஆய்வு நடத்தினர். இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து சர்வதேச அணு சக்தி முகவரமைப்பின் தலைவர் யூகியா அமோனா கூறுகையில், ஈரானின் அணுத்திட்டம் குறித்து ஆய்வு செய்வதற்காக, ஆய்வுக் குழுவினர் கடந்தாண்டு நவம்பர் மாதம் ஈரான் சென்று தீவிர சோதனை நடத்தினர்.

மீண்டும் ஒரு முறை ஐ.நா.வின் தலைமை ஆய்வாளர் ஹெர்மான் நெக்ட்ரஸ் தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். ஆனால் பார்ச்சின் பகுதிக்கு செல்ல அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இப்பகுதி தலைநகர் தெஹிரான அருகே உள்ளது. பார்ச்சின் பகுதியில் உள்ள இராணுவத் தலைமையக வளாகத்தில் தான் அணு ஆயுதங்களை மேம்படுத்தும் நோக்கில் இரகசியமாக பயங்கர வெடிபொருட்களைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈரான் இறங்கியுள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது.

இது சர்வதேச அணு சக்தி முகமைக்கு கவலை அளிப்பதாக உள்ளது. மேலும் இது சர்வதேச சமூகத்திற்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துள்ளார்.




# ஏமனில் நடந்த தாக்குதலில் 107 இராணுவத்தினர் பலி

ஏமனில் அதிபராக இருந்த அலி அப்துல்லா சலேவுக்கு எதிராக சுமார் 8 மாதங்களாக பொதுமக்கள் போராட்டம் நடந்தது. அதற்கு பணிந்த அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்து விட்டு கடந்த மாதம் துணை அதிபர் ஹாதியிடம் பொறுப்புக்களை ஒப்படைத்தார்.

அதைத் தொடர்ந்து அங்கு, அல்கொய்தா தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்து விட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அபயான் மகாணத்தில் உள்ள இராணுவ முகாம்களில் புகுந்த தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.



இதைத் தொடர்ந்து இராணுவ வீரர்களும் பதிலடி கொடுத்தனர். இதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. அதில், 107 இராணுவ வீரர்கள் பலியானார்கள். ஏராளமானவர்கள் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் தீவிரவாதிகள் தரப்பில் 32 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்தனர்.

இதற்கிடையே அபயான் மாகாண தலைநகர் ஷஞ்சியாரில் உள்ள இராணுவ முகாமில் புகுந்த அல்கொய்தா தீவிரவாதிகள் 55 வீரர்களை சிறைபிடித்தனர். அவர்களை அங்கு நடு வீதியில் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

கடந்த ஒரு ஆண்டாக இப்பகுதி தீவிரவாதிகள் வசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனப் பிரதிநிதி சிரியா பயணம்

(பீஜிங்)

சிரியாவுக்கு தமது நாட்டுப் பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைக்கவுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

சிரியாவுக்கான சீனாவின் முன்னாள் தூதுவர் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு அங்கு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


ஜனாதிபதி பஷார் அல் அஷ்ஷார்ட்டுக்கு எதிரான போராட்டங்களால் தொடரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அவர் அங்கு செல்லவுள்ளார்.

எனினும் சிரிய விவகாரங்களை முடிவுக்குக் கொண்டு வருவதில் மேற்குலகமும் சீனாவும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளன.

சிரிய விவகாரங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அமைதியான அரசியல் தீர்வே சிறந்தது என சீனா தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வருகின்றது.

# மெய்தான் பாருங்கோ...

## முகம்மாறும் முகங்கள்



வாழ்க்கையெனும் பயணத்தில சில பேர் திரும்பிப்பாராமல் ஓடிக்கொண்டிருப்பினம்; வேறுசிலர் தாங்கள் நடந்து வந்த பாதையில ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள்... துன்பதுயரங்கள்... அனுபவங்கள் எல்லாத்தையும் மனசில மூட்டை முடிச்சுக்களாகக் கட்டிக் கொண்டு திரும்பிப்பாத்தபடி... ஓடிக்கொண்டிருப்பினம்; இன்னொருசாரர் இருக்கினம்! போகிற பயணத்தில விழுகிறதும்; எழும்புகிறதும்... அனுபவங்களைச் சேகரிச்சு, அதற்கேற்றபடி வாழ்க்கையைச் சீர்படுத்தி, வாழத் தெரியாமல் ஏனோ தானோ என்கிற மனப்பான்மையில வேண்டா வெறுப்பாக ஓடிக்கொண்டிருப்பினம்.

இந்த ஓட்டம் பாருங்கோ கால சூழ் நிலையளைப் பொறுத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமா அமைஞ்சு போறதுமுண்டு. அதுக்காக எல்லாரையும் குற்றம் சொல்லுறதும் சரியில்லை, தவறான கண்ணோட்டத்தோடை பாக்கவும் ஏலாது.

ஆனா, ஒருசிலரது செயற்பாடுகளையும் அவையின்ர சொற்சிலம்பாடல்களையும் பாக்கேக்கை அநாவசியமாக வாயைத்திறக்க வேண்டியுமிருக்குது; அவையளின்ர 'வண்டவாளங்களை' தண்டவாளத்தில ஏத்தி ஓடவிடவேண்டிய தேவையுமிருக்குது.

நான் இப்ப இதில என்ன பிரச்சினையைச் சொல்ல வாறன் எண்டால், ஒருவன் தன்ர வாழ்க்கையில, தான்பட்ட கஷ்டத்தையும், கஞ்சிக்கும் வழியில்லாத நிலையையும் தன்ர மனசில மறக்காமல் வைச்சுக்கொண்டு முன்னேறுகிற விசயத்தையும், பட்ட வலிகளை மறந்து பணமும் பண்டங்களும் கிடைச்சவுடன 'பழசுகளை' அற்பமாகவும், அருவருப்பாகவும், இகழ்ச்சியாகவும் பாக்கிற இன்னொரு சாரரையும் சொல்லவாறன்.

வலிகாம இடப்பெயர்வோடை பெரும்பாலான சனங்கள் கிளாலிக்கடல் தாண்டி வன்னிக்கு வந்து சேர்ந்தகதை எல்லாருக்கும் தெரிஞ்சுதுதான். பிறகு ரணில் - பிரபாகரன் ஒப்பந்தத்தோடை அந்தப் பெரும்பாலான ஆட்களில சிலபேர் தங்கட சொந்த ஊருக்குப் போனாலும், குஞ்சுகள், குமருகளை வைச்சிருந்த ஆக்கள் ஆமிக்காரனுக்குப் பயந்து வன்னியில 'செட்டில்' ஆன மாதிரி இருந்திட்டினம்.

இவையள் வந்து பாருங்கோ வன்னியில சண்டை நடந்து, முள்ளிவாய்க்காலில இருந்து ஆமியிட்டை போகும் வரைக்கும் வன்னி மண்தான் தங்கட வாழ்க்கைக்குரிய இடமாகத் தெரிஞ்சு வைச்சிருந்தவை. போராட்டங்களுக்கு தங்கட புள்ளையளைக் குடுத்து, அந்தப் போராட்டத்துக்கு தங்களால இயன்றளவு ஆதரவளிச்சு, எல்லாமே இயக்கம்தானெண்டும் யாழ்ப்பாணத்துக்கும் இனி ஆரேன்போறதே... எண்டும் நக்கலாச் சொன்ன ஆட்கள்!

இவையள் பாருங்கோ தாங்கள் வன்னியில பட்ட வலிகளையெல்லாத்தையும் மறந்துபோனது மட்டுமில்லை, அவையளின்ர வாய்க்குள்ளால வாற சொல்லுகளும் கொஞ்சம் புளிப்பேறின மாதிரித்தான் கிடக்குது பாருங்கோ.

இப்ப ரண்டொரு நாளைக்கு முன்னம் என்ர சகபாடியோடை யாழ்ப்பாணம் வந்த இடத்தில, அவன்ர சொந்தக்காரியொருத்தி ரவுணுக்கு கிட்ட இருக்கிறாள்... எண்டு தெரிஞ்சு அங்கை போனம். போனாப்பிறகுதான் நாங்கள் ரண்டு பேரும் வரக்கூடாத இடத்துக்கு வந்திட்டம்... எண்டது புரிஞ்சது மட்டுமில்லை, அந்த வீட்டுக்காரி கதைச்ச கதையள்...?!

"மெய்யே... நீங்கள் இப்பவும் வன்னியிலயே இருக்கிறியள்? இதென்னகோதாரியிக்கை சீ...க்! அதுவுமொரு ஊரே? எங்கை பாத்தாலும் பத்தையளும் பறையளுமாத்தானே கிடக்குது. றோட்டுவழிய மாடுகள், எருமையள் சாணம் போட்டிட்டுப் படுத்திருக்குதுங்கள். போதாக்குறைக்கு குரங்குகள் வேறை..."எண்டு அந்த வீட்டுக்காரி சொல்லிக்கொண்டு போக என்ர சகபாடி திரும்பி என்னைப் பாத்துச் சிரிச்சுப் போட்டு அந்த வீட்டுக்காரியைப் பாத்துக் கேட்டான் ஒரு கேள்வி!

அக்காச்சிக்கு சண்டைக்கு முன்னம் பட்ட அனுபவங்கள் எல்லாம் காத்தோடை அள்ளுப்பட்டுப் போச்சுதாக்கும். இல்லாட்டி வலிகாமப்பக்கத்தால ஆமிவிட்டுத் துரத்த ஓடிப்போன எங்களுக்கு அடைக்கலம் தந்தது அந்த மண்தான் எண்ட நன்றி இல்லாமல் போச்சுது பாத்தியே! இப்ப சண்டை முடிஞ்சு பிள்ளை ரண்டு வெளிநாட்டுக்கும் போய் காசு களஞ்சு அனுப்புறதைக் கண்டிட்டு பழசுகளை எல்லாத்தையும் மறந்து போனியள் போலக்கிடக்குது... எண்டு கேட்டுவிட்டுட்டான் பாருங்கோ!

அவன் அப்பிடிக்கேட்டவுன அந்த வீட்டுக்காரி 'மிஸ்ஸிஸ் நரசிங்கம்' மாதிரி அவதாரம் எடுத்து விட, வாய்ப்பேச்சு விவாதமாய் மாறி... விவாதம் பெரும் வில்லங்கமாப்போகப் போகுதெண்டது எனக்கு விளங்கியிட்டுது.

என்னதான் இருந்தாலும் அந்த மனிசிக்கு இப்பிடிக் குணமும்; கொள்கையும் மாறியிருக்கக்கூடாதெண்டது எனக்குப்புரிஞ்சுது. வலிகாமத்திலயிருந்து இடம்பெயர்ந்து வந்த எல்லாச் சனத்தையும் வன்னியில உள்ள ஒவ்வொரு சிறுதுண்டு நிலமும், சிலவீடுகளும் அடைக்கலம் கொடுத்து ஆதரிச்சதை இப்ப சண்டை முடிஞ்சிட்டுது... எண்டு நினைக்கிற ஆட்கள் கேவலமாக நினைக்கிறதையும் பேசிறதையும் பாக்க, நாங்கள் மற்ற இனங்களைப்போல முன்னேறுகிறதுக்கு இன்னும் எத்தனையோ காலங்களைக் கடக்க வேண்டியிருக்கெண்டது எனக்கு விளங்கிச்சுது பாருங்கோ..

என்ர சகபாடிக்கும் அந்த வீட்டுக்காரிக்கும் சமர் முடிஞ்சபாடாயில்லை. பொல்லைக்குடுத்து அடிவேண்டின கதைமாதிரி... வன்னியில ஒரு காணிக்குள்ள இருந்தவள் எண்டதுக்கா? சுகநலம் விசாரிக்க வந்த இடத்தில அந்த மனிசி இப்பிடிக் குணம் மாறிப்போயிருக்குமெண்டதை ஆர்கண்டது கடவுளே!

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# முல்லை உள்ளூராட்சி தேர்தல் ஆர்வம் காட்டாத பிரதேச மக்கள்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று உள்ளூராட்சி மன்றத்தேர்தல் தொடர்பில் அந்தப் பிரதேச மக்கள் குறைந்தளவு ஆர்வத்தையே காட்டுவதாக தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் நடைபெற்ற புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேச மக்கள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தமது அமைப்பு இரண்டு அலுவலகங்களை ஸ்தாபிக்க உள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமை அண்மித்த பகுதிகளில் சுமார் 6000 மக்கள் வாழ்கின்ற போதிலும், 668 பேர் மாத்திரமே பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் என அவர் தெரிவித்தார்.

இதன்முலம் குறைந்தளவு மக்களே தேர்தல் தொடர்பில் ஆர்வத்துடன் இருப்பது தெரியவருவதாகவும் அவர்கூறினார்.

இதேவேளை அடையாள அட்டைகள் இல்லாதவாக்காளர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்குத் தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டார்.

தேர்தலில் வாக்களிக்கவுள்ள பெருமளவிலானவர்களுக்கு தேசிய அடையாள அட்டை இல்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பெருமளவிலான மக்கள் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சம்பளப்பணத்தில் மோசடி ஆறு சிவில் படை வீரர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக அரச சம்பளத்தை மோசடிசெய்த தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தின் ஆறு சிவில் பாதுகாப்புப் படைவீரர்கள் கந்தளாய் விசேட விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கந்தளாய் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடமைகளுக்கு உரியமுறையில் சமூகமளிக்காது சம்பளத்தைப் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் விசேட விசாரணைப் பிரிவு முன்னெடுத்துள்ளது.

## முல்லை மருத்துவமனையை புனர்நிர்மாணம் செய்ய நிதியுதவி

(முல்லைத்தீவு)

இறுதி யுத்தத்தின் போது பெரும் பாதிப்புக்கு உள்ளான முல்லைத்தீவு பொது மருத்துவமனையினை புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக 11 கோடி 80 இலட்சம் ரூபா செலவிடப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான நிதியினை அரச சார்பற்ற அமைப்பான அமெரிக்க இன்ரநஷ்னல் என்ற அமைப்பு வழங்க முன்வந்துள்ளது.

இது தொடர்பான புரந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று அமெரிக்க இன்ரநஷ்னலுக்கும், சுகாதார அமைச்சிற்கும் இடையே அண்மையில் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் உத்தியோகபூர்வமாக அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

புனர் நிர்மாணப் பணிகள் அனைத்தும் அடுத்த வருடத்தில் நிறைவடையும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த அமைப்பு ஏற்கனவே திருகோணமலை பொது மருத்துவமனையையும் புனரமைப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## கட்டுநாயக்க தாக்குதல் விசாரணை நடத்த தீர்மானம்

(கொழும்பு)

தனியார் ஓய்வூதிய சட்டமுலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது காயமடைந்த 13 பேர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க மற்றும் கே. சிறீபவன் ஆர் கே.சுரேஷ்சந்திர ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு மீதான விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.

நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் அரசியலமைப்புக்கு அமைய கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை காணப்படுகின்ற போது அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமது ஊழியர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டதுடன், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் நீதிமன்றத்தில் மனுதாரர்கள் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி ஜே.வி.வெலிஅமுண தெரிவித்தார்.

அதன்போது ஒருவர் உயிரிழந்தது.துடன் மேலும் பலர் காயமடைந்திருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆர்ப்பாட்டம் அமைதியான முறையில் இடம்பெறவில்லை என அதற்குப் பதிலளித்த பதில் சட்டமா அதிபர் குறிப்பிட்டார்.

## நீண்ட இடைவெளிக்குப் பின் வெளிவந்தது இந்துசாதனம்

சைவஉலகின் மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட 'இந்து சாதனம்' ஆன்மீகச்சஞ்சிகை மீண்டும் வெளிவந்துள்ளது. கார்த்திகை, மார்கழி ஆகிய இருமாதங்களுக்குமான இதழ்கள் இணைக்கப்பட்டு ஒரே இதழாகத்தற்போது வெளிவந்துள்ளது.

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது படத்துடன் கலாபூஷணம் வை.கா.சிற்றம்பலம் எழுதிய கட்டுரையை முதற்பக்கமாகக் கொண்டு 24 பக்கங்களில் சஞ்சிகை வெளிவந்துள்ளது. மு.நா.நடராசா, சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம், ந.குமரசிறி, செ.கந்தசத்தியதாசன், அம்பாலிகா தம்பாபிள்ளை, காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான், இராசையா குகதாசன், முனைவர் நல்லூர் சா.சரவணன், கே.எஸ்.ரமணன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், ராஜினி தேவராஜன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோரது ஆக்கங்களும் இந்து சாதனத்தில் உள்ளன.

## வீதிகளுக்கு வேகத்தடைகள் ஏற்படுத்துமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)




முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வீதி களில் வேகத் தடைகளை ஏற்படுத்த வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

தற்போது இங்குள்ள பிரதான வீதிகளில் வாகனங்கள் அதிவேகமாகப் பயணிக்கின்றன. இதனால் விபத்துக்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனவே பாடசாலைகள், ஆலயங்கள், பிரதான சந்திகள் சந்தைகள், கடைகள் அதிகமாக உள்ள இடங்கள் ஆகியவற்றில் வீதித்தடைகளை ஏற்படுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் பொலிஸார் வீதி ஒழுங்குகளை சரிவர அமுல்படுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது வீதிகளில் பாதசாரிகள் அதிகளவில் பயணிக்கின்றனர். அத்துடன் பாடசாலை மாணவர்கள் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காது தாறுமாறாகச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. இதனால் விபத்துக்கள் ஏற்படுவதோடு உயிராபத்துக்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கும். குறிப்பாக இரவு வேளைகளில் வாகனச்சாரதிகள் விதிகளைக் கடைப்பிடிக்காமல் செல்கின்றனர். எனவே பொலிஸார் அதிக அக்கறையெடுத்து வீதி ஒழுங்குகளைச் சரிவரப் பேணவேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## உழுந்துச் செய்கை அதிகரிப்பு குறைந்தது கொள்விலை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உழுந்துச் செய்கையின் விளைச்சல் அதிகரித்துக் காணப்பட்டாலும் கொள் முதற் பெறுமதி குறைவடைவதற்கான சந்தர்ப்பம் நிலவுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். உழுந்துக்கு கிராக்கி எற்பட்டுள்ள போதிலும் அதன் கொள்முதல் பெறுமதி குறைவடைவதால் தமது செலவுத் தொகையை ஈடுசெய்ய முடியாமல் போகும் எனவும் எதிர்வு கூறுகின்றனர். நெல்லின் கொள்வனவுப் பெறுமதி குறைவடைந்தது போல் உழுந்தின் கொள்முதல் பெறுமதியும் குறைவடையுமாயின் இவ்விரு பயிர்ச் செய்கைகளையும் மேற்கொண்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## தீர்விற்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை சரிவரப்பயன்படுத்திக் கொள்ளவேண்டும்

### ஈ.பி.டி.பி.யின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன்

(தென்மராட்சி)

நிரந்தர அரசியல் தீர்வின் மூலமே நாட்டைக் கட்டியெழுப்பமுடியும. எனவே தீர்விற்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைச் சரிவரப்பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தென்மராட்சிப்பிரதேச கிராமிய சுகாதார தொண்டர்களுக்கான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சிப் பிரதேச அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மெலும் உரையாற்றுகையில்

நாட்டில் சகல இன மத மோர்ழி பேசும் மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றி னைப் பெற்றுக்கொள்ளும் முகமாக ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி அரசுடன் தொடர்ந்து பேசிவருகின்றது என்றார்.

இங்கு தலைமையுரையாற்றிய ஈ.பி.டி. பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், நாட்டில் இடம் பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை வசதிகள் வாழ்வாதாரத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சி, மீள்குடியேற்றம், கல்வி வளர்ச்சி, வேலைவாய்ப்புக்கள் மற்றும் துரித அபிவிருத்தித் திட்டங்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். சுகாதாரத் தொண்டர்களின் பணி நியமனம் தொடர்பான கோரிக்கையை ஏற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசை உரிய முறையில் அணுகி முதற்கட்டமாக வடமாகாணத்தைச் சேர்ந்த 250 இற்கு மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான பணிநியமனங்கள் தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக 150 இற்கும் மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான பணி நியமனங்கள் அவர்களின் சேவைக்காலம் வயதெல்லை குடும்பச் சூழ்நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நியாயமான முறையில் நியமனங்கள் மேற்கொள்ளப்படுமென மேலும் தெரிவித்தார்.

## மதுபோதையில் சென்றவருக்கு நீதிமன்றால் தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றுக்கு மதுபோதையில் சென்ற குருநகர் வாசியை நீதிமன்ற வளாகத்தில் மூன்று நாட்கள் துப்புரவுப் பணியில் ஈடுபடுமாறு தண்டனை விதிக்கப்பட்ட சம்பவமொன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்றிருக்கிறது.

சைக்கிளொன்றைத் திருடிய குற்றச் சாட்டில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் ஒன்று செய்யப்பட்டிருந்தது. நீதவான் ஆர்.எஸ். எம். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த வழக்கில் குருநகரைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் மதுபோதையில் தள்ளாடிச் சென்றுள்ளார்.

அவரைக் கைதுசெய்த பொலிஸார் தடுப்பில் வைத்திருந்து மறுநாள் நீதவான் முன் ஆஜர்படுத்தினர். சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து எச்சரிக்கை விடுத்த நீதவான் நீதிமன்ற வளாகத்துக்குள் மூன்று நாட்களுக்கு காலை 9மணிதொடக்கம் மாலை 4 மணிவரை துப்புரவுப் பணியில் ஈடுபட வேண்டும் என்று உத்தரவிட்டார்.

# யாழ்ப்பாணத்தின் அமைதிச் சூழலை தொடர்ந்தும் பேண உழைப்பேன்



(யாழ்ப்பாணம்)

யாழில் நிலவும் அமைதியான சூழலைப் பாதுகாத்து யாழ். மாவட்ட மக்களுக்குச் சிறந்த பொலிஸ் சேவையை வழங்கப் போவதாகவும் இதற்குப் பொது மக்களது ஒத்துழைப்புத் தேவையெனவும் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்றுக் கொண்ட கே.எல். பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முதல் யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவியேற்றிருக்கும் அவர் நேற்றுப் பிற்பகல் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், தாம் பதவியேற்றுக் கொண்ட கடந்த திங்கட்கிழமையே யாழ்.நகரைச் சுற்றிப் பார்த்ததாகவும் நகரம் அமைதியாக இருப்பதனை உணர்ந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். இத்தகைய அமைதியான சூழலைக் குழப்பும் விதத்தில் குற்றச் செயல்களில் யாராவது ஈடுபட்டால் அவர்கள் குறித்து பொது மக்கள் தம்முடன் தொலைபேசியிலோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இதற்குப் பொது மக்களது பரிபூரணமான ஒத்துழைப்புத் தேவை எனவும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் சில பகுதிகளில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (பா)

# இரண்டாவது இறுதிப் போட்டியில் இலங்கை 8 விக்கெட்டுக்களால் வெற்றி

(சிட்னி)

சி.பீ கிண்ண, சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிகளின் அவுஸ்ரேலிய அணிக்கெதிரான நேற்றைய இரண்டாவது இறுதிப் போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது. இதற்கமைய நடைபெறவுள்ள மூன்றாவது இறுதிப் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெறும் பட்சத்தில் கிண்ணத்தை இலங்கை அணி கைப்பற்றும் என்பது குறிப்பிடத்தக்கது. அடிலெய்ட்டில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலாவது விக்கெட் இணைப்பாட்டமாக 179 ஓட்டங்களை டில்ஷான் மற்றும் மஹேல ஜோடி பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தமது 12ஆவது சதத்தினை பூர்த்தி செய்து டில்ஷான் 106 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார், இதனை விட அணித்தலைவர் மஹேல ஜயவர்தன 80 ஓட்டங்களையும் குமார் சங்கக்கார ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்களில் ஆறு விக்கெட்டுகளை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக டில்ஷான் தெரிவானார்.

# ஆசிரிய கலாசாலை அனுமதி நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)


ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சியைத் தொடர்வதற்கு அனுமதி பெறவுள்ள ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 22ஆம், 23ஆம், 24ஆம் 26ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இடம் பெறவுள்ளன.

அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளில் கடமைபுரியும் பயிற்றப்படாத, பட்டதாரியல்லாத ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்கள் இந்நேர்முகத் தேர்வுக்குத் தோற்ற முடியும்.

இதுவரை கிடைத்துள்ள விபரங்களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களது பாடசாலை முகவரிகளுக்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள் மட்டும் மேலதிக விபரங்களைக் கோரி கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய் போன்ற வலயங்களில் இருந்து கடந்த காலங்களில் ஆசிரியப் பயிற்சிக்காக இணைந்து போர்ச் சூழலால் இடைநடுவில் ஆசிரியப் பயிற்சியை நிறுத்தியவர்கள் மற்றும் அதேசூழலால் பயிற்சியைப் பெறமுடியா்து இருப்பவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறும் காலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

# பிரதேச சபை உறுப்பினர்களுடன் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த சந்திப்பு




(வவுனியா)

வவுனியாவில் நேற்றுக் காலை 11.00 மணியளவில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த வவுனியா மாவட்டப் பிரதேச சபை உறுப்பினர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது அமைச்சருடன் அகில இலங்கை பிரதேச சபைத் தலைவர்களின் தேசிய சம்மேளனத்தின் தலைவர் பிரசன்ன குணசிங்க, சோலங்க ஆராச்சி, வவுனியா மாவட்ட தெற்குப் பிரதேச சபைத் தலைவர் சிவலிங்கம், உப தலைவர் ரவி, நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள், மாந்தை கிழக்குப் பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (125)

# யாழ்.கடற்றொழில் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக ந.கணேசமூர்த்தி கடற்றொழில் நீரியல் வள அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளராக கடமையாற்றி வந்திருந்தார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளராக பதவி வகித்து வந்த இ.ரவீந்திரன் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளராக கடற்றொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். (பா)

## இப்படியும் பஸ்ஸில்...

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவுக்கு நேற்று மாலை 3.20 மணிக்குச் சென்ற தனியார் பேருந்து ஒன்றில் சுமார் 70 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் போதையில் பயணம் மேற்கொண்டார்.

குறித்த பயணி முதலில் நடத்துனருடன் பணம் கொடுப்பதற்காக ரகளை செய்தார். பின்னர் ஆசனத்தில் அமரும் போது அய லில் இருந்த பயணியுடன் முரண்பட்டுக் கொண்டார். இவ்வாறு மது போதையில் இருந்த குறித்த நபர் வழிநெடுகிலும் பயணிகளுக்கு இடையூறு விளைவித்தவாறே பயணம் செய்ததாக பயணிகள் தெரிவித்தனர்.

பயணிகளை பஸ்ஸில் ஏற்றும் நடத்துனர்கள் ஏனைய பயணிகளின் நிலையைக் கவனத்தில் கொண்டு போதையில் வருபவர்களை ஏற்றுவதைத் தவிர்க்குமாறு நடத்துனர்களுக்கு அறிவுரை கூறியதாகவும் தெரிய வருகின்றது. (138)

## ரஷ்ய பிரஜையின்...

ரஷ்ய நாட்டுப் பிரஜை தங்கியிருந்த ஹோட்டல் அறைக்குள் புகுந்து இவர் களவாடியதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் இவ் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேக நபரை 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 50 ஆயிரம் ரூபாவுக்கு இரண்டு ஆட்பிணையிலும் செல்வதற்கு யாழ்.நீதவான் மா.கணேசராஜா உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (137)

## ஆணைக்குழுவின்...

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் இனங்களுக்கு இடையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு போர் மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவது முக்கிய பங்காற்றுகிறது எனவும் அவர் தனதுரையில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கங்களின் ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்படு கின்ற மக்களைப் பாதுகாத்து, அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளதாகவும், அதனை ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமைகள் ஆணைக்குழு உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை அமெரிக்கா தயாரித்து வருவதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் குறிப்பிட்டிருந்ததாக ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் உரையாற்றிய அமெரிக்கப் பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக்கட்டப் போரிக் போது மேற்கொள்ளப்பட்ட போர் மீறல்கள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தவில்லை என அமெரிக்க இராஜாங்கத் திளைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் மற்றும் ஐக்கிய நாடுகள் நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற அறிமுகக் கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வாழ்வெழுச்சித் திட்டத் தினூடாக கிடைக்கப் பெறக் கூடிய நன்மைகள் மேம்பாடு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது முக்கிய கடப்பாடாகும். அதிலும் இம்மாவட்டத்தின் பௌதீக வளங்களைக் கொண்டு முன் னெடுக்கக் கூடிய பாரம்பரிய சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை நவீனமயப்படுத்துவதனூடாக அது சார்ந்த குடும்பங்களினது பொருளாதாரம் மேம்படும் அதேவேளை புதிய தொழிற் துறைகளையும் அபிவிருத்தி செய்ய முடியும் என்றும் தெரிவித்த அமைச்சர் வாழ்வெழுச்சித் திட்டம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தும் அதேவேளை முக்கியமாக அது தொடர்பில் நம்பிக்கையளிப்பதும் வழிகாட்டுவதும் துறைசார்ந்த அதிகாரிகளின் கடமையாகும் என்றும் தெரிவித்தார்.

குறிப்பாக இம்மாதம் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ள கண்காட்சியின் போது பெருமளவிலான மக்களை கலந்து கொள்ளச் செய்வதனூடாக வாழ்வெழுச்சி மனைப் பொருளாதார நிகழ்ச்சி திட்டத்தில் அதிகளவிலான பயனாளிகளை உள்வாங்க முடியும் என்பதுடன், கண்காட்சியின் பின்னர் துறைசார்ந்த தொழில் முயற்சியாளர்களுக்கு வங்கிளினூடாக இலகு கடன்களை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் உறுதிமொழி வழங்கினார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வாழ்வெழுச்சி தொடர்பான விளக்கவுரையினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி நிகழ்த்தியதைத் தொடர்ந்து கண்காட்சி தொடர்பாக அமைச்சின் பணிப்பாளர் கமகேயும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் திருமதி ஜஸ்மின் மன்னப்பெருமவும் நிகழ்த்தினர்.

## இலங்கையில்...

பாதுகாக்க முடியாதுள்ள அவர்கள் இறைமை மிக்க ஏனைய நாடுகளில் தலையிடுவதை நியாயப்படுத்துவதற்காக பாதுகாப்பதற்கான கடப்பாடு 'ஆர்2பி' எனும் கோட்பாட்டை அமெரிக்கா பின்பற்றி வருகிறது" என அவர் கூறினார்.

இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடு என பிரித்தானிய வெளிவிவகார அலுவலக அமைச்சர் ஜெரமி பிரவுண் கூறியமை குறித்து தமரா குணநாயகம் பதிலளிக்கையில், பயங்கரவாத நாடுகள், முரட்டு நாடுகள் என்பனவற்றைப் போன்று தோல்வியடைந்த நாடுகள் என்பதும் தேவதூத மற்றும் ஒழுக்கவியல் தோற்றத்துடன், இறைமையுள்ள நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதை நியாயப்படுத்து வதற்குப் பயன்படுத்தப்படும் சொற்தொகுப்பின் ஒரு பகுதியே எனக் கூறினார்.

## சமூக அபிவிருத்திக்கு..

வழங்கியுள்ளது. இதில் 455 மில்லியன் ரூபா சுகாதார சேவைகளை முன்னேற்றுவதற்கான உபகரணங்களை கொள்வனவு செய்யவும் பின்தங்கிய பிரதேசங்களில் பாதுகாப்பான குடிநீர் வசதியை ஏற்படுத்தவும் கிராமிய வீதி வலையமைப்புக்களை அமைக்கவும் வழங்கப்படுகின்றது.

இந்த உதவியிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் நீர் வழங்கல் தொகுதியை புனரமைக்க சுமார் 1.206 பில்லியன் ரூபா பயன்படுத்தப்படவுள்ளது. இந்த நிதியுதவி தொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி.வி. ஜயசுந்தர ஆகியோருக்கிடையில் நேற்று செவ்வாய்க்கிழமை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் கையெழுத்திடப்பட்டது.

## உருளைக் கிழங்கிற்கு...

யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

உள்ளூர் விவசாயிகள் பாதுகாக்கப்படுவார்கள் என எமது மகிந்த சிந்தனைக் கொள்கை வேலைத்திட்டத்தில் எமது அரசாங்கம் தெளிவாக குறிப்பிட்டுள்ளது. அந்த கொள்கையின் அடிப்படையிலேயே உருளைக் கிழங்கிற்கான இறக்குமதி வரியை அதிகரித்துள்ளோம் என அவர் கூறினார். கடந்த வருடம் உருளைக்கிழங்கிற்கான இறக்குமதி வரி கிலோவுக்கு 10 ரூபாவிலிருந்து 20 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. தற்போது 20 ரூபாவிலிருந்து 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு எதிராக செயற்பட கூட்டமைப்பு துணிந்துவிட்டது



தமிழ்மக்களின் உணர்வுகளுக்கும், அபிலாஷை களுக்கும் எதிராகச் செயற்படக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு துணிந்து விட்டதாக கூட்ட மைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கலந்துகொள்ளாமல் போனதற்கு தமிழ்த் தேசியக கூட்டமைப்பினால் கூறப்பட்ட காரணங்களும் , கூறப்படுகின்ற விளக்கங்களும் வேடிக்கையானவை என்றும் அவர் தெரிவித்தா.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட அறிவிப்பைக் கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் கூடிய அதன் நாடாளு மன்றக் குழு அங்கீகரித்தி ருக்கின்றது. தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும் அபிலாஷைகளுக்கும் எதிராகச் செயற்பட கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு துணிந்து நிற்கின்றது என்பது இதன் மூலம் தெளி வாகியுள்ளது. கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன், ஜெனிவாவுக்கு கூட்டமைப்பு போகப்போவதில்லை என்று விடுத்த அறிக்கை தமிழ் மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த சூழ்நிலையில், நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தை அவர் மீண்டும் கூட்ட முன்வந்தார். கடந்த வெள்ளிக் கிழமை நிகழ்ந்த கூட்டத்தில் நல்லதோர் முடிவு எடுக்கப்படும் என்றே தமிழ மக்கள் அனைவரும் எதிர்ப்பார்த்திருந்தனர். ஆனால், சம்பந்தன் விடுத்திருந்த அறிவிப்பை இந்த நாடாளுமன்றக் கூட்டமும் அங்கீகரித்து ஆமோதித்திருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு, எவரின் நலன்களுக்காகச் செயற்படுகின்றது என்ற கேள்வியை நாம் இச்சந்தர்ப்பத்தில் எழுப்ப நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். தமிழ் இனத்தின் துன்ப, துயரங்களை உலக அரங்கில் எடுத்துச் சொல்வதற்கு கிடைத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தினை வேண்டும் என்றே தவறவிட்டவர்கள் யாரைக் காப்பாற்றப் பார்க்கின்றார்கள்? ஒற்றுமையின் பெயரால் சுயநல சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுத்து நிற்கும் கூட்டமைப்பின் சில பெருந் தலைவர்களுக்கு கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் துணைபோயிருப்பது மிகவும் வேதனைக்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## போதைப் பொருட்களுடன் ஐந்து நபர்கள் கைது

கல்கிசை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரத்மலானை ரஜமாவத்தையில் போதைப் பொருள் கடத்திச் சென்ற ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு நான்கு சோதனை நடவடிக்கைகளின் போது இவர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸை ரத்மலானை - ரஜமாவத்தையில் அதிகாலை 12.15 அளவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் கார் ஒன்றில் இருந்து 9360 கிராம் போதைப் பொருளுடன் இரு சந்தேகநபர்களும், அதிகாலை 12.50 அளவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 720 கிராம் போதைப் பொருளுடன் ஒருவரும், அதிகாலை 01.20 மணிக்கு மோட்டார் சைக்கிளில் 360 கிராம் போதைப் , பொருள் கடத்திச் சென்ற ஒருவரும், அதிகாலை வேளையில் 360 கிராம் போதைப் பொருளுடன் மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டதாக கல்கிஸ்ஸை பொலிஸார் குறிப்பிட்டனர்.

## "சலனம்" வெளியீட்டுவிழா

சலனம் எனும் குறும்படம் இன்று மாலை 3.00 மணிக்கு ஞானம்ஸ் ஹொட்டலில் வெளியிட்டு வைக்கப்படுகின்றது. ஜி.ஏ.ஜெலானின் இயக்கத்தில் உருவான இக் குறும்பட வெளியீட்டுவிழா அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் அரச அதிபர் இமெல்டா சுகுமார், பேராசிரியர் அருட்தந்தை ஜி.பிலேந்திரன், கலாநிதி திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணி, த.ஈஸ்வரராஜா, பேராசிரியர் இரா சிவச்சந்திரன் ஆகியோர் கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

## இலங்கைக்கு எதிராக தீர்மானத்தை ஆதரிக்கக் கோரி உண்ணாவிரதம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஏற்பாட்டில் தமிழ் நாடு முழுவதும் நேற்று உண்ணா விரதப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

அக்கட்சியின் தலைவர் தா.பாண்டியன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன், வ.கம்யூ. தேசிய செயலாளர் டி.ராஜா, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், வ.கம்யூனிஸ்ட் தலைவர் மகேந்திரன், அ.தி.மு.க. கட்சித் தலைவர் பொன்னையன் உட்பட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

## வெற்றி பெற்றவர்களுக்கு கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் போட்டியில், யாழ். மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற இப் பரிசளிப்பு விழாவில், கட்டுரை, கவிதை, ஆங்கில போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார். (எஸ்)


## கூட்டமைப்புக்குத் தடை நீடிப்பு

இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச். பியசேன அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அரசாங்கத்திற்கு சார்பாக வாக்களித்தமைக்காக அவரை கட்சியிலிருந்து நீக்குவதற்கு அல்லது அவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு இலங்கை தமிழரசுக் கட்சிக்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத தடை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிபதி ஜி.ஏ.டி. கணேபொல நேற்று இத் தடையை நீடித்தார். வழக்குரைஞர் பைஸர் முஸ்தபாவின் ஆதரவுடன் வழக்குரைஞர் சஜீவ களுவாராய்ச்சிக்கூடாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹேவகே பியசேன தாக்கல் செய்த மனுமீதான விசாரணையின் போதே இத்தடையுத தரவு நீடிக்கப்பட்டது.

## தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு இந்திய அரசு உதவவில்லை

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் போதுமான உதவிகளைச் செய்யவில்லை என இந்திய கம்யூனிச கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது. இலங்கையிலுள்ள தமிழர்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு இந்தியா தலையிட வேண்டும் என சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது அந்தக் கட்சி இதனை வலியுறுத்தியுள்ளது. இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இடையிலான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணப்படாமை குறித்து இந்திய கம்யூனிஸ்ட கட்சியின் பொதுச் செயலாளர் ராமகிருஷ்னன் கண்டனம் தெரிவித்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



காரைநகர் பிரதேச பாடசாலைகள் பற்றிய தரிசனம் இறுவட்டு வெளியீட்டு விழாவில் தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் இராதா கிருஷ்ணன் அவர்களிடமிருந்து தொழிலதிபர் நாகரத்தினம் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்ளும்போது...

## பரசிற்றமோலுக்கு வருகிறது கட்டுப்பாடு





(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வருகின்ற நோயாளர்களில் அநேகமானோர் தமக்கு வழங்கப்படும் பரசிற்றமோல் அடங்கலான மருந்துகளை எறிந்துவிடுகின்றனர். இதனால் நோயாளர்களுக்கு வழங்கப்படும் பரசிற்றமோலின் அளவைக் குறைப்பதென சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதை தாம் வரவேற்பதாக அரசாங்க வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்து இலவசமாக வழங்கப்படுவதால் தான் பல நோயாளர்கள் இங்கு வருகின்றனர். மருந்தை பெற்றுக்கொள்ளும் இவர்கள் பின்னர் அவற்றை எறிந்துவிடுகின்றனர் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் டாக்டர் சந்திக எப்பித்தகடுவ கூறினார். உடம்பில் நோவு, குத்து, வலி என்று கூறிக்கொண்டு வரும் நோயாளிகள் பலருக்கு வைத்தியர்கள் பரசிற்றமோல் வழங்குகின்றனர். ஏனைய மருந்துகளை விட பரசிற்றமோல் கூடுதலாக வழங்கப்படுகின்றது. இதனால் வருடத்தின் கடைசிப் பகுதியில் பரசிற்றமோலுக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது என எப்பித்தகடுவ குறிப்பிட்டுள்ளார். பரசிற்றமோலை ஒட்டுமொத்தமாக மறுப்பது நியாயமில்லையாததால் பரசிற்றமோலின் அளவைக் குறைப்பதே நல்லது. நோயாளியின் வயது, எடைக்கு ஏற்ப இதன் அளவு மாறுபடும் எனவும் அவர் கூறினார்.


## மணல் ஏற்றுவதற்கு போலி அனுமதிப் பத்திரங்கள்



மணல் ஏற்றிச் செல்வதற்காக ஒன்பதாயிரம் போலி அனுமதிப் பத்திரங்களைக் குருநாகல் பகுதியில் விநியோகிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில தெரியவந்துள்ளது. பாரியளவிலான இந்த மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். இந்த சந்தேகநபர்களால் சுமார் பத்தாயிரம் போலி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்பட்டமை தெரிவந்துள்ளது. இதுவரையில் சுமார் 600 போலி அனுமதிப்பத்திரங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் குருநாகல் பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்தனவின் கண்காணிப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## ஒரு மின்குமிழை 3 மணிநேரம் அணைத்தால் நாட்டில் 250 மெகாவாற் மின்சாரம் மீதம்

### சம்பிக்க ரணவக்க ஆலோசனை



(கொழும்பு)

இலங்கையில் மாலை 6.30 மணி முதல் இரவு 9.30 வரையில் மின்சார பாவனைக்காக 2000 மெகாவாற் சக்தி மின்சாரம் செலவிடப்படுகின்றது. இந்த மின்சாரம் அதிகமாக விரயமாகும் 3 மணித்தியாலங்களின் போது ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மின்குமிழை . அணைத்துவிட்டால் அதன் மூலம் 250 மெகாவாற் மின்சார சக்தியை சேமிக்க முடியும். இந்த மூன்று மணித்தியாலங்களில் ஒரு அலகு மின்சாரத்தை தயாரிப்பதற்கு 60 ரூபா செலவிடப்படுகின்ற போதும் இந்த ஒவ்வொரு அலகையும் பாவனையாளர்களுக்கு மின்சார சபை 16 ரூபாவுக்கு விற்பனை செய்து பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குகிறது.

நாடெங்கிலும் உள்ள பாவனையாளர்கள் மாலை 6 மணி முதல் இரவு 9.30 மணி வரை வீடுகளில் ஓரிரு மின்குமிழ்களை மாத்திரம் ஒளிரச் செய்து தொலைக் காட்சிப் பெட்டிகளை மாத்திரம் செயற்படுத்தினால் பெருமளவு மின்சாரத்தை சேமிக்க முடியும் என்றார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.